விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை (11.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பருத்தித்துறையில் மர்ம மனிதன்

வடமராட்சி பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் பற்றைக்குள் மறைந்திருந்த மர்ம மனிதனை அப்பகுதி மக்கள் (19 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் நேற்று விபத்து இளம் குடும்பஸ்தர் பலி

பளையில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான திருநாவுக்கரசு பிரபாகர் (வயது 25) என்பவரே உயிரிழந்தவர் (20 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பிளேக் பேசுவார்

## அமெரிக்கா அறிவிப்பு

(கொழும்பு)

நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவது தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு மேற்கொள்ளும் விஜயத்தின் நோக்கங்களில் ஒன்றாகும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)



## சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இராணுவத்தினர் இருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்

### தொல்புரத்தில் சம்பவம்


(சுழிபுரம்)

சுழிபுரம் தொல்புரம் மத்தியில் நேற்றிரவு 9.30 மணியளவில் வீட்டு வளவொன்றில் நடமாடிய 2 இராணுவத்தினரைபொது மக்கள் பிடித்து வைத்தமையை அடுத்து அப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சுழிபுரம் தொல்புரம் மத்தி அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள வீட்டு வளவொன்றினுள் சீருடையணிந்த படையினர் இருவர் நடமாடுவதை அவதானித்த பொதுமக்கள் ஒன்று திரண்டு அவர்களை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. இச்சம்பவத்தையடுத்து அவ் இடத்திற்கு வந்த (19 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வரும் பிளேக் சம்பந்தனை முதலில் சந்திப்பார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பு பாராளுமன்ற குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான இராஜாங்க செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்கை சந்தித்து உரையாடவுள்ளார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நாளை காலை 7.10 மணிக்கு நடைபெறும் இச்சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் பற்றி இராஜாங்க செயலாளருடன் அவர் உரையாட விருப்பதாக தெரியவருகிறது.

கடந்த மாத பிற்பகுதியில் வரவிருந்த பிளேக் தவிர்க்க முடியாத காரணத்தினால் இலங்கை விஜயத்தை ஒத்தி வைத்தார். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரான (02ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற குடிசைக் கைத்தொழில் கண்காட்சியினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டியில் ஊர்காவற்றுறை அன்ரனிஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டு விழாவில் உடற்பயிற்சி ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி சம்பியனானது.

அத்துடன் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை சம்பியனானது.

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையில் 2011 ஆம் ஆண்டிற்கான பெரு விளையாட்டு விழா மூன்று கட்டங்களாக நடத்தப்படுகின்றது.

இதில் கடந்த மூன்று தினங்களாக பதுளை பொது விளையாட்டரங்கில் முதற் கட்டமாகப் போட்டிகள் நடைபெற்றது.

இதில் நேற்று நடைபெற்ற உடற்பயிற்சி ஆண்கள் பிரிவில் ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி முதலாமிடத்தைப் பிடித்து சம்பியனானது.

இதில் கடந்த வருட சம்பியன் இளவாலை ஹென்ரியரசர் கல்லூரிக்கு நான்காமிடம் கிடைத்தது. (19 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் கூட்டத் தொடர் நாளை இலங்கை பிரதிநிதிகள் ஜெனிவா பயணம்

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 18வது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்கு அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஜெனிவாவுக்கு புறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில்அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான சஜின் வாஸ் குணவர்த்தன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஜோர்தானில் தற்போது தங்கியுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அங்கிருந்து ஜெனிவாவுக்கு செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகள் சிலரும் இக்கூட்டத் தொடரில் கலந்து கொள்ள (19 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வர்த்தகப் பெருமக்களே...**

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

**வீடு விற்பனைக்கு**

சுழிபுரம் மத்தியில் 5 பரப்பு காணியில் அமைந்த வீடு, எல்லை வசதிகளுடன் 1/2 வாசி பங்கு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-
077 3301041 (6087)

**வேலையாட்கள் தேவை**

ஆண் / பெண் இருபாலாரும் தேவை. முன்அனுபவம் விரும்பத் தக்கது.

தொடர்புக்கு :-
ராஜா பான்சி
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (6114)

**தேவை**

பள்ளி முன்னிலை பிள்ளைகளை பராமரிக்க அனுபவமுள்ள ஒரு பெண் தேவை.
நேரில் வந்து சந்திக்கவும்.
பணிப்பாளர் :
சென்றல் நர்ஸிங் ஹோம்,
350, பலாலி வீதி,
திருநெல்வேலி (6100)

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரி வீதி, கற்பகப் பிள்ளையார் கோவில் வீதி இணைந்து சுன்னாகம், மருதனார்மடம் செல்லும்வழியில் 'காட்டுத்தம்பர்' வீட்டிற்கு அருகிலுள்ள தோட்டக் காணி தனிக் கிணற்றுடன் 14 பரப்பு 11. 84 குளி அடங்கலான காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு : 0213219734
0770415723
(சி-4357)

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணம்**

SRI LANKA RED CROSS SOCIETY

**இரவு - பகல் அம்புலன்ஸ் சேவை**

**அழையுங்கள் :**

**021 - 222 2561**

**021 - 222 9792**

**021 - 321 5555**

(சி-4387)


# அடிகாயங்களுடன் சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

புத்தூர்- மீசாலை வீதியில் புத்தூர் சந்தியில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் துரத்தில் அடிகாயங்களுடன் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட ஆணின் சடலம்அடையாளங்காணப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின்தந்தையானஎஸ்.சுரேஸ் (வயது- 36) என்பவர் என அவருடைய மனைவி அடையாளங்காட்டியுள்ளார்.

இவர் கடந்த 6 ஆம் திகதி காணாமல் போயுள்ளார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-4)


**வீடுவிற்பனைக்கு**

யாழ்.தட்டாதெரு ஐயனார் கோயிலுக்கு அருகாமையில் பிரதான வீதியில் 3 பரப்பு காணியில் அமைந்த நல்ல நிலையிலுள்ள வீடு, தனிக்கிணறு. சகல வசதிகளுடன் உடன் விற்பனைக்குண்டு.

அத்துடன் 1 1/2 பரப்புகளாக பிரிக்கப்பட்ட துண்டுகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 0775421730 (6089)

**VECANCY**

பகுதிநேர இசைப் பயிற்சிக்கான பயிற்சியாளரை YMCA தெரிவு செய்யவுள்ளது. தகுதியுடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 18.09.2011 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். (ஓகன், பாடல் பயிற்றுவிக்கத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

**இலவச பயிற்சி வகுப்புக்கள் !!!!!!!!!**

மேற்படி விளம்பரத்திற்கு அமைவாக ஓகன், பாட்டு, நாடகம், ஓவியம் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 14 வயது முதல் 30 வயது வரை உள்ளவர்கள் இவ் வகுப்புகளில் பங்குகொள்ளலாம்.

தொடர்புக்கு : YMCA,
பொதுச் செயலாளர்,
கொடிகாமம் வீதி,
கட்டைவேலி,
கரவெட்டி.
(சி-4385)


## இலங்...

காலப்பகுதியில் இலங்கையின் நிலைவரம் தொடர்பில் கண்டறிவதற்கு வருகை தரும் பிளேக் இலங்கையில் தாம் சந்திக்கவுள்ள நிகழ்ச்சிப் பட்டியலில் முதல் இரா.சம்பந்தனை சந்திப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமென தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் சுயமாகத் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன**

சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 18-09-2011 காலை 09.00 மணி
கிழமைநாள் பிரிவு ஆரம்பம் : 19-09-2011 காலை 09.00 மணி

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- Saree Work
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- தையல் அறிவு அற்றவர்களுக்கான தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.
- மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும். மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.
மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.



**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

**Acs Technology System (PVT) Ltd**

1st Mile Post Junction, Point Pedro

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சில் அங்கீகாரம் பெற்றது.
- சட்ட அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

75% கட்டணக் கழிவுடன்

**கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் - 11.09.2011**

1. Ms Office
2. Desktop Publishing
3. Graphic Designing
4. Web Developping
5. Java
6. Hardware & Networking
7. Computer Application
8. Software Engineering
9. Multimedia
10. Computer Accounting
11. Internet
12. KIDS Programs
13. தரம் 10-11 - ICT
14. தரம் 12-13 - ICT & IT

தொடர்புகளுக்கும் பதிவுகளுக்கும் Address - 1ம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை.
Phone No - 0750435257 (6115)

**UNI மற்றும் Nottingham College of London கல்லூரிகள் வழங்கும் A/L 2011 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான**
**பல்வேறு சர்வதேச கற்கை நெறிகள் தொடர்பான மாபெரும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கும் தொழிற்பயிற்சியும் !!!**

eie | Unitec

**காலம் - 16/09/2011 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் - காலை 10.30 - 12.30 மணிவரை**
**இடம் - நாவலர் கலாச்சார மண்டபம்**

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உடனடி அனுமதியும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளதால் பெற்றோரும் விரும்பின் பங்குபற்றலாம்!!!

முக்கிய குறிப்பு !!! நீங்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி அதிஷ்டசாலி ஆகுங்கள்!!

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு ரூபா 60000/= பெறுமதியான Pentium - 04 கணினி ஒன்று எம்மால் இலவசமாக வழங்கப்படும். ஆகையால் தவறாது அனைத்து மாணவர்களும் கலந்து அதிஷ்டசாலி ஆகுங்கள்!

Advanced Diploma in ICT, HND, B.Sc (Hons), Mobile Phone Repairing, Hacking & IT Security, Multimedia கற்கை நெறிகள் பற்றிய பூரண விளக்கங்கள் மற்றும் அன்றைய தினம் அனைத்து கற்கை நெறிகளுக்கும் புலமைப் பரிசில்களும் வழங்கப்படும்!!!

இக் கருத்தரங்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளதால் தற்போது A/L பீட்சைக்கு தேற்றி அடுத்து எத்தகைய கற்கைநெறிகளை நீங்கள் கற்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் தவறாது அனைத்து மாணவர்களும் பங்கு பற்றி பயன் பெற்றுக் கொள்ளவும்.

!!! இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும் !!! இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!! மேலும் பல கணினி உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும்!!

மேலதிக விபரங்களுக்கு:- UNI - ICT Campus (Pvt) Ltd, No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110 862

(எமது நிறுவனமானது உலகில் உள்ள 40 ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச உயர் கல்லூரிகளால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும்)

- Conditions for Apply -

SAMSUNG

விரல்கள் விழிப்பை ஏற்படுத்தட்டும்

உங்களுக்கு சிறந்த சலுகையை கொடுப்பதற்கு ஸேம்ஸங்கும் டயலொக்கும் இணைந்துள்ளது.



ஸேம்ஸங் ஹீரோ 1085 இனை கொள்வனவு செய்து இலவசமாக டயலொக் ப்ரீ பெய்ட் இணைப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்

3 மாதங்கள் வரை ஒவ்வொரு மாதமும் டயலொக்கிலிருந்து டயலொக்கிற்கு 1000 SMS இலவசம்

ஸேம்ஸங் ஹீரோ 1085

- அட்வான்ஸ் மொபைல் ட்ரெகர்
- வர்ணத்திரை
- 26 மணித்தியால FM ரேடியோ பாவனை
- 12 மணி நேரம் பேசும் வசதி
- MP3 ரிங் டோர்ன் / வொய்ஸ் கீய் டோர்ன்ஸ்
- 40 மணித்தியால ப்ரைட் டோர்ச் பாவனை

இலவசமான அசல் ஸேம்ஸங் ஹான்ட்ஸ் ப்ரீ கிட்

ரூபா. 2,990/=

Next is what? SAMSUNG mobile

2011 அக்டோபர் 10 வரை செல்லுபடியாகும் இச்சலுகையை நாடுமுழுவதுமுள்ள ஸேம்ஸங் மொபைல் வியாபாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதனை மீட்டுக்கொள்வதற்கு எந்தவொரு டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கும் விஜயம் செய்யுங்கள்.



கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்
அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218
www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

www.sagittarius.lk

"எனக்கு வேணும் அப்பா கூட பேசிகிட்டே இருக்க..."



ரூ. 199
Reload செய்து
ரூ. 300க்கு
IDD

www.mudra.lk

www.hutch.lk
0785 785 785

HUTCH

# மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய

# தேர்த் திருவிழா சிறப்புமலர்-2011.09.11

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவநேயச் செல்வர்களே!


சைவமும் தமிழும் செழுமையுறும் மண்டைதீவு பதியில் இன்று திருவெண்காட்டு சித்தி விநாயகன் சித்திரத் தேரில் பவனி வருவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருவதாகும். பல்வேறு இன்னல்களை சந்தித்த மண்டைதீவு மக்கள் எத்துணை துன்பம் வந்தபோதிலும் திருவெண்காட்டு சித்தி விநாயகன் மீது கொண்ட அளவு கடந்த அன்பை இவ்விழா உணர்த்தி நிற்கிறது.

விநாயகனின் திருவருளும் அடியார்களின் பக்திப் பிரவாகமும் சேர்ந்து தேர்த் திருவிழா சிறப்புற நல்லாசி கூறுகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**





## சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் உயர் பண்பாடும் என்றும் குறையாத மண்டை தீவில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் திருவெண்காட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவம் சிறப்பாக நடைபெறுவது இறைவனின் திருவருளேயாம்.

மக்கள் பட்ட துன்பங்கள் விலகி இன்பமயமான சூழ்நிலை தோன்ற சித்திரத் தேரில் திருவெண்காட்டு விநாயகன் வலம்வரும் அற்புதக் காட்சி அமைகின்றது.

இடப்பெயர்வுகள், சொத்து இழப்புகள் என்ற பல்வேறு துன்பங்களை மண்டைதீவு மக்கள் கடந்த காலங்களில் சந்தித்த போதிலும் அவர்கள் திருவெண்காட்டு சித்தி விநாயகன் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்ததை நினைக்கும் போது திருவெண்காட்டு விநாயகனின் பெருமை புலப்படும். எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் இத்தேர் மஹோற்சவத்தை சிறப்புற நடத்தும் ஆலய அறங்காவலர்களுக்கும் உபய காரர்களுக்கும் ஊர் மக்களுக்கும் விநாயகனின் திருவருள் கிடைக்க வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள்**
**(சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி)**

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி




மண்டைதீவு திருவெண்காடு திருவருள் சித்தி விநாயகப் பெருமானின் கரவருட தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற திருவருள் கைகூடிய வேளையில் இறைவன் உலகில் உள்ள எல்லா உயிர்களையும் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளுகின்ற ஐந்து தொழில்களையும் செய்கிறார்.

அழித்தல் தொழிலை சங்காரம் என்று சொல்வார்கள். சங்காரம் என்றால் மனதில் தோன்றுகின்ற காமம், குரோதம், லோகம், மதம், ஆச்சரியம் போன்ற எண்ணங்களை அழித்தலே சங்காரத் திருவிழா ஆகிய தேர்த்திருவிழா ஆகும்.

திருவெண்காடு சித்தி விநாயகர் அழகு மிகு சித்திரத் தேரில் ஆரோகணம் செய்கின்ற போது எங்கள் மனதில் தோன்றுகின்ற தீய எண்ணங்களையும் அழித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் பெருமான் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வோம்.

**மஹோற்சவ பிரதம குரு**
**குருவம்ச சிகாமணி**
**சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள்.**



## ஆலய வரலாறு

மண்டைதீவு மையப் பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும் திருக்கொன்றை, வேம்பு முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப் பகுதியாகத் திகழ்ந்தது.

இக்காட்டில் ஒரு பெரிய ஆலய விருட்சமும் காணப்பட்டது. இக்கிராமத்தின் வட பகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டின் ஊடாகவே சென்று வந்தார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆல விருட்சத்தின் அருகாமையில் அமைந்திருந்தது.

ஒருநாள் மாலைநேரம் ஐயம்பிள்ளை உடையார் இப்பாதை வழியாகச் சென்று அவ் ஆல விருட்சத்தை கடந்து கொண்டிருக்கையில் தன்னைப் பின் பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அவர் திணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தபோது ஆல விருட்சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று தன் துதிக்கையை அவரை நோக்கி நீட்டிய வண்ணம் நின்றது. இதைக் கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன்போது யானை ஆலமரத்தின் மறுபக்கம் சென்று மறைந்து விட்டது. இச்சம்பவம் அவருக்கு ஓர் அதிசயமாகவும் மிகுந்த பயமாகவும் இருந்தது. எனினும் அவ் யானையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் அச் சுற்றாடலில் தேடினார். ஆனால் அவரால் யானையை மீண்டும் காணமுடியவில்லை. அவர் இச் சம்பவத்தை தனது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்து ஆலோசித்தார்.

அவர்கள் எல்லோரும் பிள்ளையார் தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள். இதன் காரணமாகவே அவர் அவ்வாலய விருட்சத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயமாக சிறப்புற்று விளங்குகின்றது.

18ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற வரலாற்று பெருமைமிக்க இவ்வாலயத்தில் இன்று சித்திரத்தேரில் விநாயகன் வீதியுலா வரும் அற்புதம் நாம் செய்த தவப்பேறேயாகும்.

திருவெண்காட்டு சித்தி விநாயகன் தேரேறி வருகின்ற இந்நாளில் நாமும் அவன் திருப்பாதம் தொழுது இன்புறுவோமாக.

**பொ.வி.திருநாவுக்கரசு**
**(ஆலய தர்மகர்த்தா)**

SAMSUNG

## அறிமுகமாகின்றது இரட்டை தொடர்புகளுக்கு ஸேம்ஸங் ஹீரோ 1182 டுவல் சிம் ஃபோன்.

ஒரே நேரத்தில் இரு வலையமைப்புகளும் தொழிற்படக்கூடிய, (Dual SIM Standby) கவர்ச்சியான ஸேம்ஸங் ஹீரோ 1182 டுவல் சிம் தொலைபேசிகள் நம்ப முடியாத விலையில்.




வர்ணத்திரை
FM ரேடியோ
MP3 ரிங் டோர்ன்ஸ்
லவுட்ஸ்பீகர்
11 மணி நேரம் பேசும் வசதி
மெடலிக் வடிவம்

Hero 1182

Dual SIM

ரூபா.3,990/-

Next is what? SAMSUNG mobile

Grant McCann

**கையடக்க தொலைபேசிக்கு ஒரு வருட உத்தரவாதம் / பட்டரி சாஜர் மற்றும் இயர்ஃபோனுக்கு 6 மாத உத்தரவாதம்**

ஸேம்ஸங் மொபைல் பிரிவிலேஜ் பங்காளர்கள்: மொபைல் மெக்ஸ் வரையறுக்கப்பட்ட(தனியார்) ஸ்தாபனம்,பிலெடினம் டவர்ஸ், இல.425, காலி வீதி, கொழும்பு 3. உடன் அழைப்பு: 011 5 744 455, சிந்தன ஜி.எஸ்,எம் வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்தாபனம், இல.101 ஏ, ஹைலெவல் வீதி, மஹரகம. உடன் அழைப்பு 011 2 850 851, சொவ்ட் ட்ரிங்க்ஸ் (தனியார்) நிறுவனம். 161A/1, பிரதான வீதி, களுத்துறை, உடன் அழைப்பு - 034 2236512, நாடளாவிய ஸேம்ஸங் கையடக்க தொலைபேசி விற்பனை பிரதிநிதிகள். நாடளாவிய ஸேம்ஸங் மொபைல் ஸ்டார் விற்பனையாளர்கள்: லிபர்டி பிளாஸா: சகீனா செலுலர் - 0722 255 895, புளூ கிராஸ்- 0777 550 592, மெஜஸ்டிக் சிடி: புளூ கிராஸ் - 0777 551 969, டிவைன் செல் கெயார்- 0773 241 842, சிங்ககிரி வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்தாபனம், 551, டி.பி.ஜெயா மாவத்தை, கொழும்பு10, உடன் அழைப்பு: 011 5 413 413, கிரிபத்கொட: திலவர்தன செலுலர் - 011 4 813 069, மொபைல் கோர்ட் - 0777 753 145, சம்பா ஸ்டோர்ஸ்- 081 2 223 052, த போன் ஆர்கேட்: 0775 456 607, நெற் வேர்க் ஜி.எஸ்,எம் பேங் சைட்- 0715 911 911. தேசிய விற்பனையாளர்கள்: ஜோன் கீல்ஸ் ஒபீஸ் ஒடோமேஷன் (தனியார்) ஸ்தாபனம், இல.90, யூனியன் பிளேஸ்,கொழும்பு 2, தொ. பேசி 011 2 313 000 உடன் அழைப்பு 0777 902 887, ஃபெக்ஸ்011 2 431 745 ஈமெயில்: samsung@jkoa.lk ஸேம்ஸங் நுகர்வோர் சேவை நிலையம் : கொழும்பு : வரையறுக்கப்பட்ட த ஃபோன் கம்பனி இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம், இல 4, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு - 04. உதவி அழைப்பு : 0777 322 223/0777 595 595. காலி : 124 C, வக்வெல்ல வீதி, மினுவங்கொட. அழைப்பு : 0777 361 444. கண்டி : 174, கொடுகொடல்ல வீதி. அழைப்பு : 0777 487 447. ஈ-மெயில் support.srilanka@samsung.com ஸேம்ஸங் தொ.பே அழைப்பு நிலையம் : 011 7 347 070 /011 7 348 080, பிராந்திய விநியோகஸ்தர்கள் : வரையறுக்கப்பட்ட சொஃப்ட்ரிங்ஸ் டெக்நொலஜிஸ் (தனியார்) நிறுவனம். - 0718 726 497. வரையறுக்கப்பட்ட செல்மார்ட் டெலிகொம் சேர்விசஸ் (தனியார்) நிறுவனம். - 0715 364 356. ஸ்டீல் ஹவுஸ் - 0716 313 313. மற்றும் வரையறுக்கப்பட்ட குளோபல் சோன் (தனியார்) நிறுவனம். - 0722 301 022. வரையறுக்கப்பட்ட மொப்லிக்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம். - 0718 000 888. வரையறுக்கப்பட்ட யுனிவர்சல் செலுலர் (தனியார்) நிறுவனம். - 0714 893 708. வரையறுக்கப்பட்ட மெக்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம். - 0715 358 654. அல்பா வீடியோ - 0777 278 867. வரையறுக்கப்பட்ட யுனிவர்சல் செலுலர் (தனியார்) நிறுவனம். - 0715 346 938. சுபர்டெக் ஒஃபீஸ் ஒடோமேஷன் - 0777 510 210. யுனிடெல் - 0750 386 067. மிட்லன்ட் எயார் டெக்நொலஜிஸ் - 0272 222 277. நஷனல் என்டர்ப்ரைசஸ் - 0772 337 666. தர்ஷன என்டர்ப்ரைசஸ் - 0777 266 199, வரையறுக்கப்பட்ட இன்ஃபோமேஷன் அன்ட் டேடா மனேஜ்மன்ற் சிஸ்டம் (தனியார்) நிறுவனம். - 0714 297 546. யுனிவர் செல் மொபைல்ஸ் - 0775 556 868. டி மொபைல் - 0777 401 777.

# வெளிநாட்டு சிகரெட்டை விற்றதாக கைதான வர்த்தகர் பிணையில் விடுதலை

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் வெளிநாட்டு சிகரெட்டை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலைப் பகுதியில் சம்பவதினம் தனது வர்த்தக நிலையத்தில் வெளிநாட்டு சிகரெட்டை விற்பனைக்கு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த வர்த்தகரை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டுள்ளார்.

(ஸ்ரீ-4-24)

# கிரவல் மண்ணை ஏற்றிச் செல்லும் பாரவூர்திகளால் விபத்துக்கள்

(மல்லாவி)

வீதி அகலிப்பிற்காகவும் ஏனைய உள் வீதிகள் புனரமைப்பு வேலைகளுக்காகவும் மாங்குளம் மூன்று முறிப்பு பகுதியிலிருந்து கிரவல் மண் அகழப்பட்டு வருகின்றது.

இக் கிரவல் மண்ணுடன் பயணிக்கும் பாரவூர்திகள் கிரவல் மண்ணை மூடி தறப்பாள் கட்டப்படாது பயணிக்கின்றனர்.

இதனால் இவ் வீதியால் பயணிக்கும் பாதசாரிகள், துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்போர் மீது கிரவல்மண்கள் காற்றுடன் அள்ளுண்டு வீசுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.


அத்துடன் விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் ஏ9 வீதியில் பளைப்பகுதியில் வீதியால் பயணித்து கொண்டிருந்தவரின் அருகாக கிரவல்மண் ஏற்றிக் கொண்டு சென்றபோது பார ஊர்தியிலிருந்து பறந்த கிரவல் தூசியினால் குறித்த நபர் நிலைதடுமாறி கீழே விழுந்த நிலையில் பின்னால் வந்த பாரவூர்தி அவர் மீது ஏறியதில் அந்தநபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

எனவே கிரவலை ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் அதனை மூடிய நிலையில் கொண்டு செல்ல வேண்டுமென அவ்வீதியியை பயன்படுத்தும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-4-15)

# இயக்குநர் பாலச்சந்தருக்கு தாதா சாகேப் பால்கே விருது

## ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வழங்கினார்



(புதுடில்லி)

தமிழ்த் திரைப்பட இயக்குநர் பாலச்சந்தருக்கு டில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விழாவில் தாதா சாகேப் பால்கே விருதை ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வழங்கினார். இந்திய சினிமாவின் உயர்ந்த விருதான தாதா சாகேப் பால்கே விருதினை இயக்குநர் கே.பாலச்சந்தருக்கு டில்லியில் நடந்த விமரிசையான விழாவில் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வழங்கினார்.

மத்திய அரசால் வழங்கப்டும் இந்த விருதினை தமிழ் சினிமாவில் இருந்து பெறும் இரண்டாவது நபர் பாலச்சந்தர் ஆவார். ஏற்கனவே 1996 ஆம் ஆண்டு நடிகர் திலகம் சிவாஜிகணேசன் இந்த விருதை பெற்றார். தமிழ் சினிமாவின் ஆலமரமாக விளங்குகிற பாலச்சந்தருக்கு 2010 ஆம் ஆண்டிற்கான தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டுள்ளது.

. இந்திய சினிமா தொழிலில் இருக்கும் பிரபல நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்கள் கலந்து கொண்ட விழாவில் பாலச்சந்தருக்கு இந்த விருதும் 10 இலட்சம் ரூபாய் காசோலையும் அவர் இந்திய சினிமாவிற்கு ஆற்றிய தொண்டினைப் பாராட்டி வழங்கப்பட்டது.

பாலச்சந்தருக்கு இந்த விருதினை பிரதீபா பட்டேல் வழங்கியபோது விழா நடந்த விக்ஜான் பவனில் கரகோஷம் அடங்க பல நிமிடங்கள் பிடித்தது. இதேபோல 2010 ஆம் ஆண்டிற்கான தேசிய விருதினை தமிழ் திரைப் படங்களான ஆடுகளம், தெற்மேற்கு பருவக் காற்று, எந்திரன் ஆகிய மூன்று படங்கள் வென்றன.

ஆடுகளத்தில் நடித்த தனுஷ் சிறந்த நடிகராகவும் வெற்றிமாறன் சிறந்த இயக்குநராகவும் கிஷோர் சிறந்த எடிட்டராகவும் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. சிறந்த நடிகைக்கான விருதை தென்மேற்குப்பருவக் காற்றில் நடித்த சரண்யா பொன்வண்ணன் பெற்றார். சிறந்ததுணை நடிகராக மைனா படத்தில் நடித்த தம்பிராமையாவும் துணை நடிகையாக நம்மகிராமம் படத்தில் நடித்த சுகுமாரியும் விருது பெற்றனர்.

சிறந்த பாடலாசிரியருக்கான விருது தென்மேற்கு பருவக்காற்று படத்தில் பாடல்கள் எழுதிய கவிஞர் வைரமுத்து பெற்றார். மேலும் தென்மேற்கு பருவக்காற்று சிறந்த தமிழ்ப்படமாகவும் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

(ஸ்ரீ-2)

# சர்வதேச சமூகத்தின் கேள்விகளுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும்

## ஜயலத் எம்.பி.தெரிவிப்பு



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 18 ஆவது கூட்டத் தொடரின் சர்வதேச சமூகம் தொடுக்கும் கேள்விக் கணைகளுக்கு இலங்கை அரசு தக்க பதிலடி கொடுக்க வேண்டும். இல்லையேல் சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நாவின் மனித உரிமை சபையின் கூட்டத்தொடர் குறித்துக் கருத்து வெளியிடும் போதே ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் அக்கட்சியின் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இதனை குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்குச் சென்றுள்ள இலங்கை குழுவிடம் சர்வதேச தரப்பினர் பல்வேறு கோணங்களில் கேள்விகளைத் தொடுப்பர்.

இதற்கு அவர்கள் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். மாறாக மௌனம் காத்தால் பெரும் சர்வதேச அழுத்தம் ஏற்படும். இலங்கை தரப்பினர் தக்க பதிலளிப்பார்களா இல்லையா என்பது தொடர்பாக தான் கருத்து கூறவிரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# எலிக்காய்ச்சலால் 56 பேர் பாதிப்பு

இந்த மாதத்தின் கடந்த ஒன்பது தினங்களில் மாத்திரம் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 56 பேர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இதே காலப்பகுதியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 12 நோயாளர்கள் பதிவானதாக அமைச்சின் தொற்றுநோய் ஆய்வு பிரிவு தெரிவிக்கின்றது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 989 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. குருநாகல் மாவட்டத்திலேயே மிகக்கூடுதலாக ஆயிரத்து 404 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 446 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 405 பேரும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 60 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# வேலூர் சிறைச்சாலையில் நளினி -முருகன் சந்திப்பு

(வேலூர்)

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி அதே வழக்கில் தூக்குதண்டனை விதிக்கப்பட்ட தனது கணவர் முருகனை வேலூர் சிறையில் நேற்றைய தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜனாதிபதியால் கடந்த மாதம் முருகனின் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின் இருவரும் முதல் முறையாக சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் நீடித்ததாக வேலூர் சிறைத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

சென்னை புழல் சிறையில் அடைக் கப்பட்டிருந்த நளினி புதன்கிழமையன்று வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முருகன், பேரறிவாளன், சாந்தன் மூவரது தூக்கு தண்டனையை குறைக்க வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதும் இம்மூவரையும் தூக்கிலிட சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

(ஸ்ரீ-2)


## வெளிநாட்டு விசா நடைமுறைகள் பற்றிய சட்டரீதியான அனுகுமுறைகள் பற்றி அறிய ஓர் சந்தர்ப்பம்

## விசா விளக்கக் கருத்தரங்கு

இத்துறை சார்ந்த தொழில்சார் நிபுணர்கள், அவுஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழ் தொழில் அதிபர்கள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பை தொழிலிடமாகக் கொண்ட பிரபல சட்டத்தரணிகள் பங்கு கொண்டு ஆலோசனை வழங்குவர்.

காலம் :-18.09.2011 ஞாயிறு மு.ப 10.00 மணி

இடம் :- சரஸ்வதி மண்டபம் (இராஜா க்ரீம் ஹவுஸ்)
சேர்.பொன். இராமநாதன் வீதி (பல்கலைக்கழக வீதி, யாழ்ப்பாணம்),
கே.கே.எஸ்.வீதி (நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில்)

அனுமதி முற்றிலும் இலவசம்

SMS மூலம் மட்டும் பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளவும்.
mob: 0726106862

13.09.2011இற்கு முன் முன்பதிவு செய்யாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். தொலைபேசிமூலம் உரையாடல் இடம்பெறமாட்டாது. கருத்தரங்கின் முடிவில் விரும்பியவருக்கு UK, Australia விசா படிவங்கள் வழங்கப்படும்.

அருளம்பலம் நகுலேந்திரன்

(சி-4382)




இராணுவத்தினரின் 51 ஆவது படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் விசேட வைத்திய நிபுணர்களினால் இலவச வைத்திய பரிசோதனை நேற்று முன்தினம் அளவெட்டி மகாஜனாசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வைத்திய நிபுணர்கள் நோயாளிகளைப் பரிசோதனை செய்வதையும், மருந்துகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## போட்டித்தன்மைவாய்ந்த நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 52ஆவது இடம்

(கொழும்பு)

உலக பொருளாதார மன்றம் சர்வதேச ரீதியில் மேற்கொண்ட உலகின் போட்டித்தன்மை வாய்ந்த 142 நாடுகள் தொடர்பான ஆய்வில் இலங்கை 52 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த வருடம் 62 ஆவது இடத்திலும் அதற்கு முன்னர் 79 ஆவது இடத்திலும் இருந்த இலங்கை இம்முறை 52 ஆவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையானது கடந்த வருடத்தின் அதன் தெற்காசிய பிராந்திய அயல் நாடுகளை விட சிறப்பான முறையில் முன்னேறி வருவதாகவும் கிழக்காசிய நாடுகளுடனான வித்தியாசத்தை பெருமளவில் குறைத்திருப்பதாகவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்தியில் தனியார்துறை கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றமை அவதானிக்கப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எனினும் உட்கட்டுமான அபிவிருத்தி வளர்ச்சிப் போக்கை காண்பித்து வரும் நிலைமையில் உயர்கல்வி மற்றும் தொழிலாளர் உரிமைகள், பயிற்சி நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் எதிர்மறையான போக்கினை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நுண் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுமானால் இலங்கையின் நிலை மேலும் உயர்வடையும் என்றும் வர்த்தக சம்மேளனம் எதிர்வுகூறியுள்ளது. (ஶ்ரீ-4)

## எல்-செல்வடோர் குடியரசுடன் இராஜதந்திர உறவுகளைப் பேண அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய அமெரிக்க நாடான எல்-செல்வடோர் குடியரசுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரீஸ் முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய அமெரிக்காவின் மிகவும் சிறிய நாடான-எல்-செல்வடோர் குடியரசு கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக இலங்கையுடன் இருபக்க வர்த்தக உறவுகளைப் பேணி வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

உலகில் நிலவுகின்ற வர்த்தக சமநிலையற்ற தன்மையின் கீழ் இந்த நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது, இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு சார்பாக அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோப்பி, சீனி, பதப்படுத்தப்பட்ட உணவுகள், ஆடை வகைகள், தங்கம், எதனோல் போன்ற பொருட்களை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் செல்வடோர் ஏற்றுமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

## கொழும்புக்கும் வவுனியாவுக்குமிடையில் மேலதிக கடுகதி புகையிரத சேவை

### இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டைக்கும் வவுனியாவிற்குமிடையிலான மற்றுமொரு கடுகதி புகையிரத சேவை இன்று ஆரம்பமாகவுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம மேற்படி புகையிரதச் சேவையை இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதுடன் இதற்கான விசேட வைபவம் இன்று பிற்பகல் அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர்கள்-மாகாண அமைச்சர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நகரங்களுக்கிடையிலான கடுகதி புகையிரத சேவையின் கீழ் இன்று காலை 6.50 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் புகையிரதம் முற்பகல் 11.05 இற்கு வவுனியாவைச் சென்றடைவதுடன் மீண்டும் பிற்பகல் 3.10 இற்கு வவுனியாவிலிருந்து கொழும்பிற்கு புறப்படும் இந்த புகையிரதம் பிற்பகல் 7.15 இற்கு கொழும்பு கோட்டையை வந்தடையும். (ஶ்ரீ-2)

## தீவகம் முழுவதும் மூன்று வருடங்களில் பசுமை நிறைந்த பூமியாக மாற்றம் பெறும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



தீவகம் முழுவதும் அடுத்து வரும் மூன்று வருடங்களில் பசுமை நிறைந்த பூமியாக மாற்றம் பெறும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேசசபைக்கு உழவு இயந்திரங்கள், தண்ணீர் தாங்கிகள், கடனுதவிகள் மற்றும் தையல் இயந்திரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலை தீவக மக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டதன் பிரகாரம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முக்கியமாக இப்பகுதியின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர்.

இந்நிலையில் தீவகத்தை முழுமையான பசுமை நிறைந்த இடமாக அடுத்த 3 ஆண்டுகளுக்குள் மாற்ற முடியும் என்பதுடன் இதற்காக முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களுக்கும் மக்களினது ஒன்றிணைந்த ஒத்துழைப்பும் ஒத்தாசையும் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத்தலைவர் சிவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உரையாற்றினார்.

தொடர்ந்து வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்காக 15 இலட்சம் ரூபாவும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு 10 இலட்சம் ரூபாவும் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 15 இலட்சம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது. (ஶ்ரீ-2)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்

### ஊடகவியல் குறுங்காலப்பயிற்சி III

### "புலனாய்வு மற்றும் அரசியல் இதழியல்"
### "Investigative and Political Journalism"

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் பத்திரிகைத்துறை சார்ந்தோரிற்கான குறுங்காலப் பயிற்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

*யார் யார் பங்குபற்றலாம்?*

- செய்தி இதழ் ஆசிரியர்கள்
- அலுவலக மற்றும் பிரதேச செய்தியாளர்கள்
- சிறு சஞ்சிகை ஆசிரியர்கள்
- பருவகால பத்திரிகைகளில் பணிபுரிவோர்
- நிறுவனங்களின் தொடர்பாடல் மற்றும் ஊடக உத்தியோகத்தர்கள்
- பாடசாலைகளில் ஊடகக் கல்வி ஆசிரியர்கள்

**பயிற்சிக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது**
**பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



சுவீடன் நாட்டின் போயோ (FOJO) நிறுவனத்தின் ஊடகவியல் விரிவுரையாளரும், பயிற்றுவிப்பாளருமான வில்லி ஒலிவர் (Willie Olivier) அவர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

பயிற்சி விரிவுரைகளையும், செயன் முறைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியதான 30 மணித்தியாலங்களைக் கொண்டதாகும்.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 15.09.2011 இற்கு முன்னதாக நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தொடர்பு முகவரி:-

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்,**
**இல. 84, ஜும்மா பள்ளி லேன்,**
**யாழ்ப்பாணம் (வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகாமையில்)**
**தொலைபேசி இல.021 2229873**

மின்னஞ்சல்:- directormrtc@gmail.com

பதிவாளர்
09.09.2011

(சி-4369)

# த.தே.கூட்டமைப்பின் இரு எம்.பி.க்களுக்கு எதிராக புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

## திவயின தகவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் லண்டனுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

கிறிஸ்பூதங்கள் வடக்கு வாழ் தமிழ் பெண்களை பீதியடையச்செய்து வருவதாக குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் லண்டனில் போலியான பிரசாரங்களை மேற்கொண்டுள்ளதாக அவ்வூடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் லண்டனில் நிதி திரட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்ததாகக் குறித்த ஊடகம் குற்றஞ்சுமத்தியுள்ளது. (ஸ்ரீ-4)

# யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களாகியும் மீள்குடியேற்றப்படாதுள்ள சம்பூர் மக்கள்

## அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதால் அச்சம்

(கொழும்பு)

திருகோணமலை சம்பூரைச் சேர்ந்த மக்கள் தற்போது ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் கடந்த 2006 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்தபோது இம் மக்கள் கட்டைபறிச்சான், பட்டித்திடல், கிளிவெட்டி, மணற்சேனை போன்ற முகாம்களில் அகதிகளாகத் தங்க வைக்கப்பட்டனர்.

தற்போது விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிவடைந்து ஈராண்டுகள் கடந்த பின்னும் இம்முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 250 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 100 பேர் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு, சூடைக்குடா, நவரட்ணபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் அன்றாட ஜீவனோபாயத்திற்கு தங்கள் பிரதேசத்தையே நம்பி வாழ்ந்தவர்கள்.

தற்போது சம்பூர் பிரதேசங்களில் இந்திய அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதனால் தங்களது வாழ்விடங்களும் ஜீவனோபாயமும் பாதிக்கப்படும் அபாயமுள்ளதாக இம்மக்கள் அஞ்சுகின்றனர்.

ஆகவே, இவ் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதற்கு முன் தங்கள் சொந்த இடங்களில் தங்களை மீளக் குடியமர்த்துமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2)

# முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 881 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் 881 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடர்வதற்கு முன்னதாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

விசாரணைகள் பூர்த்தியானதன் பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் தொடரப்படும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சவேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

22 முன்னாள் விடுதல்லைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றங்களிலும் 278 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மேலும் 200 பேர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் 204 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 4 ஆயிரத்து 281 பேர் கைது செய்யப்பட்டதாகவும் [illegible] வழக்குத் தொடர்வதற்கு போதியளவு [illegible]ரங்கள் இல்லாத காரணத்தினால் ஆயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள் என சவேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் 40 ஆம் சரத்தின் அடிப்படையில் வழக்குகள் தொடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுத்து வைப்பது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரிசி ஏற்றுமதி செய்ய திட்டம்

மொரகஹந்த மற்றும் களுகங்கை திட்டங்களை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாட்டின் அரிசியை ஏற்றுமதி செய்ய எண்ணியுள்ளதாக மஹாவலி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய காணிகளுக்கு நீர் கிடைக்கும் என அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டீ.எம்.சீ.திசாநாயக்க தெரிவித்தார். இலங்கையின் கீரி அரிசிக்கு மத்திய கிழக்கு நாடுகளில் பாரிய கேள்வி நிலவுவதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)


## திருமண நல்வாழ்த்துக்கள்





ஸ்ரீஸ்கந்தராஜா

நிலாஜினி

இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை திருமண பந்தத்தில் இணையும் எமது கல்லூரி ஆசிரியை நிலாஜினி -ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதியினர் சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
வகுப்பாசிரியர்,
2009 கலைப் பிரிவு
மாணவர்கள்,
மானிப்பாய்
இந்துக் கல்லூரி.

(A-4372)

## மணமக்களை வாழ்த்துகின்றோம்



மணமகன்
திரு திருமதி ஈஸ்வரநாதன்
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
திருநிறைச் செல்வன்
துஷ்யந்தன்

மணமகள்
திரு திருமதி மகேந்திரன்
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
கௌசி



மங்களகரமான கர வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை இன்று ஜேர்மனியில் திருமண பந்தத்தில் இணையும் எங்கள் கல்லூரியின் முதல்வர் திரு அப்பாப்பிள்ளை ஈஸ்வரநாதன் அவர்களின் புதல்வனும் மனையாளும் சீரும் சிறப்பும் பெற்று வளமுடன் வாழ மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

11.09.2011
உரும்பிராய்.

ஆசிரியர் கழகம்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி,
உரும்பிராய்.

(C-4377)

# மற்றொரு கோணம்



ஈஷா ஹோம் ஸ்கூல் மற்றும் ஈஷா சன்ஸ்கிருதி போன்ற பள்ளிகளில் அத்தகைய அர்ப்பணிப்பு உணர்வு மிக்க ஆசிரியர்கள் உருவாக்கப் படுகிறார்கள். ஒரு குழந்தையை உருவாக்குவதில் உங்கள் பங்கு என்ன வென்று நீங்கள் தீர்மானிக்க வேண்டு மென்றால் அதற்கு ஒரு வழியிருக் கிறது. உங்கள் தன்மையில் நீங்கள் முழுமையான ஆனந்தத்துடன் இருக் கிறீர்களா, இந்த உலகமே உங்களைப்

## ஒரு முழுமையான மனிதரே ஒரு குழந்தையை 'உருவாக்கும்' தகுதியுடையவர்

**தாய், தந்தை, ஆசிரியர்- ஒரு குழந்தையை உருவாக்குவதில் யாருக்கு அதிக பங்கு?**

ஒரு குழந்தையின் பெற்றோர் என்பதனாலேயே உங்களுக்கு அந்தக் குழந்தையின் மீது முழு உரிமை இருப்பதாகக் கருதிவிடா தீர்கள். குழந்தையின் நலனுக்கா கவே தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள அந்தக் காலத்தில் பலர் இருந்தார்கள். அவர் களுக்கு ஆச்சாரியார்கள் என்று பெயர். குழந்தைகளுக்கு உடலள

**ஆன்மீகம் 30**

விலும், மனதளவிலும் உயிரளவி லும் முழு வளர்ச்சிக்கு என்ன தேவை என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. அவர்கள் குழந் தைகளை தங்கள் சுயநலத்திற்கோ சுயவிருப்பு வெறுப்புக்கோ பயன் படுத்திக் கொண்டவர்களில்லை.

போல் இருந்தால் நன்றாக இருக்குமா என்று உங்களையே கேளுங்கள். நீங்கள் முழுமையான மனிதர்தான் என்று மனப்பூர்வமாக நீங்கள் நம்பினால் ஒரு குழந்தையை உருவாக் குகிற தகுதியை பெற்றோர் என்ற நிலையிலோ அசிரியர் என்ற நிலை யிலோ நீங்கள் மேற்கொள்ள முடியும். நீங்களே மகிழ்ச்சியாக இல்லை யென்றால் உங்கள் மனதின் தடை களை ஒரு குழந்தையிடம் இறக்குமதி செய்ய உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. உங்கள் அபத்தம் உங்களு டனேயே முடியட்டும். ஏனென்றால் குழந்தை வளர்ப்பு என்பது ஓர் உரிமையல்ல. அது கிடைத்தற்கரிய பெரும் பேறு.

**பெண்ணைத் தெய்வம் என்கிறார் கள். ஏன் ஆணைச் சொல்வதில்லை?**

பெண்ணைத் தெய்வம் என்று சொல்கிறார்களே தவிர அப்படி நடத்துகிறார்களா என்பதுதான் முக் கியம். நமது கலாசாரத்தில் எந்தெந்த உயிர்களுக்கெல்லாம் பாதுகாப்புத் தேவைப்பட்டதோ அவற்றையெல் லாம் தெய்வம் என்று சொல்லி விட்டார்கள். மரத்தைத் தெய்வம் என்றார்கள், பசுவைத் தெய்வம் என்றார்கள், பாம்பைத் தெய்வம் என்றார்கள், குழந்தையைத் தெய்வம் என்றார்கள். ஏனென்றால் இந்த உயிர்களுக்கெல்லாம் பாதுகாப்புத் தேவைப்பட்டது. மனிதன் அவற்றை அழிப்பதற்கும் துன்புறுத்துவதற்கும்



தயார் நிலையில் இருந்தான். உடல் வலிமையில் ஆண்களுக்குப் பெண் கள் சமநிலையில் இல்லாததால் அவர்களையும் நம் கலாசாரத்தில் தெய்வம் என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனால், இப்பொழுதுள்ள சூழ் நிலையில் ஆண்களுக்கும் பெண் களிடமிருந்து பாதுகாப்புத் தேவைப் படுவதால் ஆண்களையும் தெய்வம் என்று சொல்லிவிடலாம்.

**கடவுளை கோடி சூரியப்பிர காசம் என்கிறார்கள் சிலர். இருள் வடிவமாக கடவுள் அனுபவம் இருக்கும் என்கிறார்கள் சிலர். இரண்டில் எது உண்மை?**

கடவுளைச் சூரியப்பிரகாசமாக நினைப்பவர்கள் பகல் நேரத்தில் கற்பனை செய்திருப்பார்கள். இருள் வடிவமாக நினைப்பவர்கள் இரவு நேரத்தில் கற்பனை செய்திருப் பார்கள். உங்களுக்கு எது வெளிச்சமோ அது ஆந் தைக்கு இருட்டாக இருக் கிறது. உங்களுக்கு எது இருட்டோ அது ஆந் தைக்கு வெளிச்சமாக இருக்கிறது. எனவே இருட்டும் வெளிச்சமும் புற உலகைச் சார்ந்த வையே தவிர கடவுளுக் கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. கடவுள் அனுப வத்தை இப்படிக் கேட் டுத் தெரிந்து கொள்ள வோ, கற்பனை செய்யவோ முயலாமல் உங்கள் தேடு தலில் கண்டடைய முயன் றால் நன்றாக இருக்கும். உங்கள் உயிருக்கு எது மூலமோ... அதுதான் கடவுள். தேடலுக்கும் அதுதான் துருப்புச்சீட்டு.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

09

**சிறப்புப் பெயர் பெற்றோரது பாடல்களில் நிலமும் ஒழுக்கமும் மீள்பார்வை**

இப்பாடல்களில் பயன்படுத் தப்பட்ட மொழிநடை பற்றிய விரி வான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டும். இவ்வட்டவணை யிலும் 4 பாடல்கள் மட்டுமே தலைவன் கூற்றாக உள்ளது இப்பாடல்களில் புலவர் பயன் படுத்திய மொழி, பெண்மொழி யென்பதைக் கூற்றுநிலைகளும் காட்டி நிற்கின்றன பெண்பாற் புலவர்களே இப்பாடல்களைப் பாடியிருக்க வேண்டும் சங்க அகப் பாடல்களில் பயன்படுத்தப்பட்ட பெண் மொழியின் இயல்புகளுக்கு இப்பாடல்களும் சான்றாக அமை யக்கூடும் சங்கப்பாடல்களில் குறுந் தொகைப்பாடல்கள் முதலில் தொகுக்கப்பட்டன என்ற கருத்தும் உள்ளது. அடியளவால் குறைந்த பாடல்களாக இருப்பது இதற் கொரு காரணம் என்பர். வாய்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
**முன்னை நாள் ஆய்வாளர்**
**ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக்கழகம்**

மொழியாகப் பேணப்பட்ட பாடல் களைப் பின்னர் தேடித் தொகுக் கும்போது பாடலைப் பாடியவர் பெயர் அறியப்படாத ஒரு நிலை இருந்துள்ளது. எனினும் மொழி நடை, கூற்றுநிலை சிறப்புச் சொற் பயன்பாடு உணர்வு நிலை விளக்கம் என்பவற்றினை அடிப்படையாக வைத்து நோக்கும் போது பெண் மொழிப் பயன்பாட்டினைக் கண்ட றிய முடியும். எடுத்துக்காட்டாகக் **கயமனார்** எனச் சிறப்புப் பெயர் வழங்கப்பட்ட புலவர் பாடிய பாடல்கள் 3 செவிலித்தாயின் உணர்வுநிலையை தெளிவாகக் காட்டுகின்றன. பெண்ணின் வளர்ப்பு நிலை, போகும்வழி துன்பமற்றி ருக்கத் தெய்வத்தை வேண்டுதல், பெண்ணின் இளவயது நிலை என்பன பற்றிக் குறிப்பிடும் இடத்து பெண் மொழியே பயன்படுத்தப்பட் டுள்ளது. தாயின் உள்ளக்கிடக்கை சொற்கள் மூலமும் தொடர்கள் மூலமும் சிறப்பாக வெளிப்பட் டுள்ளன.

எனவே, இன்றைய நவீன பெண் எழுத்தாளர்கள் இப்பெண் மொழிப் பயன்பாட்டு நிலையை நவீன

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இலக்கிய ஆக்கங்களில் பயன்படுத்த வேண்டும். பெண்ணின் நுட்பமான மன உணர்வுகளை வெளிப்படுத்த சங்கப் பெண்பாற் புலவர்கள் பயன் படுத்திய மொழிநடையை உய்த் துணர வேண்டும். இக்காலத்தில் மொழிப் பயன்பாடு பற்றிய கவ னிப்பு மிக அருகியுள்ளது. தமிழ் மொழியின் வளமான ஆற்றல் இலக்கியப்படைப்புக்களில் பதிவு செய்யப்பட வேண்டும். மரபு நிலையில் மட்டுமன்றி பால் வேறுபாட்டு நிலையில் மொழிப் பயன்பாடு பிற மொழிகளிலும் பேணப்பட்டு வருகின்றது. பெண் ணின் சிந்தனைத்திறன் மொழிவழி வெளி வருவதைப் பண்டைய இலக்கியங்கள் பதிவு செய்தமைக் கும் ஒரு காரணம் உண்டு. பெண் ஒரு மொழிபயிற்றும் முதல் ஆசிரி யராகவும் விளங்குகிறாள். அம் மொழியே தாய்மொழி என்ற சிறப்ப நிலையில் பேணப்பட்டு வருகிறது. எனவே, அந்த மொழி பயிற்று மொழியாகவும் இலக்கியப்படைப்பு மொழியாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியம் சமூகப்பதிவுகளை மேற்கொள்ளும் கருவியாகப் பயன்படுவது. அதன் மொழிப்பயன்பாடு மிகக் கவன மாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். தொழில் நுட்பமும், விஞ்ஞான அறிவின் வளர்ச்சியின் மொழியைச் சிதைக்கும் காரணி களாக அமைந்து விடக்கூடாது. எழுத்தாளர்கள் இதனைக் கருத்திற் கொண்டு மொழியைப் பயன்படுத்தி இலக்கிய ஆக்கங்களை வெளிக் கொணர வேண்டும்.

(முற்றும்)

"வரலாறு எவ்வளவுக்கு சிறந் திருக்கின்றதோ அவ்வளவுக்கு இலக் கியமும் சிறந்திருக்கும். வடமொழி நீங்கலாக மற்றெல்லா இலக்கி யங்களும் இந்தியாவில் ஏறக்குறைய 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் தோன்றின. ஆனால் தமிழ் இலக் கியமோ கிறீஸ்துவுக்கு முன்னமே பெரும் மலர்ச்சியைக் கொண்டுள் ளது. மேலும் சங்க இலக்கியம், சமய இலக்கியம் மட்டுமன்று மக்களுடைய வாழ்க்கையைக் காட்டும் உலக இலக் கியமும் அது. தொல்காப்பியம், எட் டுத் தொகையும், பத்துப்பாட்டும் இந்திய இலக்கியத்தில் மட்டுமல்ல உலக இலக்கியத்திலேயே பெரும் இடத்தைப் பெற்றுள்ளன. வள்ளு வரின் திருக் குறளைப் போன்ற நூல் உலகில் இல்லை. என்பது அல்பெட் சுவைட்சரின் துணிபு. நீதி இலக்கியத் தைப் போல் நமது பக்தி இலக்கியமும் சிறப்புள்ளது. நம்முடைய கலைகள் நம்முடைய கோயில்கள் சிறப்புப் பெற்றவை. மொழி அமைப்பிலும் வளத்திலும் தமிழ் மொழி உலக மொழிகளில் சிறந்தது.

தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ்மண்டிக் கிடக்கும் அதன் பண் பாடு பற்றியெல்லாம் ஆராய்பவர் கள் மேலும் அவை பற்றி ஆராய விரும்புவர். ஆகவேதான் தமிழ் ஆராச்சி வளர்ந்து கொண்டே இருக் கின்றது.

-தனிநாயகம் அடிகளார்

# 3-வது யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி

# ஜனவரி 20, 21 மற்றும் 22-ம் திகதிகளில்

மூன்றாவது வருடமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி (JITF) அடுத்த வருடம் ஜனவரி 20,21மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு அருகில் இடம்பெறவிருக்கின்றது.

லங்கா எக்ஸிபிஷன் அன்ட் கொன்பரன்ஸ் சேர்விசஸ் பிரைவட் லிமிட்டட் (LECS) இக்கண்காட்சியை ஏற்பாடு செய்யவுள்ளது.

வட பகுதி மக்களின் வாழ்க்கையுடன் நேரடித் தொடர்புடைய சகல வர்த்தக மற்றும் தொழில்துறைகளையும் உள்ளடக்கியதாக இக்கண்காட்சி அமையவிருக்கின்றது.

21-ம் நூற்றாண்டில் துரிதமாக வளர்ச்சி அடைந்துவரும் நவீன தொழில்நுட்பங்கள், புதிய கைத்தொழில்கள் என்பவற்றை அறிந்து கொள்ளவும், அவற்றின் பலாபலன்களை அனுபவிக்கவும், இப் பிரதேச மக்கள் இக்கண்காட்சியின் மூலம் சிறந்த வாய்ப்பினை பெறுவார்கள்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி ஒரு குறுகிய காலத்திற்குள் ' யாழ்ப்பாண மறுமலர்ச்சி' திட்டத்தின் ஓர் அங்கமாகவும் வட பகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒரு வருடாந்த நிகழ்வாகவும் மாறியுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒவ்வொரு துறையையும் அது பிரதிநிதித்துவம் செய்கின்றது.

கட்டுமானம், விவசாயம், உணவுப் பானங்களும் பொதியாக்கம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆடையணிகலன்கள், வாகனங்கள், ஹோட்டல் பயணமும் சுற்றுலாவும், நிதிச் சேவைகள், பாவனைப் பொருட்கள் போன்ற பிரதான துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் கண்காட்சியில் பங்குபற்றுகின்றன.

இத்துறைகளின் சகல உப பிரிவுகளையும் சார்ந்த பொருட்களும் இன்னும் பலவும் காட்சிக்கு வைக்கப்பட இருப்பதால் யாழ்.மக்கள் உண்மையிலேயே சர்வதேச தரமான ஓர் அனுபவத்தில் பங்குபெற இருக்கிறார்கள்.

2011 ஜனவரியில் நடைபெற்ற யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வருகை தந்திருந்தார்கள் என LECS பணிப்பாளர் ஜனாப் இம்ரான் ஹசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்கள் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2012 ஐ ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

முதல் இரு வருடங்களிலும் அவர்கள் காட்டிய ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டு இதனை நிச்சயமாகச் சொல்லமுடியும்.

தென்னிலங்கையுடனும் உலகின் ஏனைய பகுதிகளுடனும் உறுதி




யான வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்த யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி சிறந்த வழியாகும் என அதிகமான யாழ்ப்பாண மக்கள் கருதுகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




# திருமலையில் 'ஈஸ்ட் எக்ஸ்போ 2011'

ஈஸ்ட் எக்ஸ்போ 2011 மாபெரும் வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 23,24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் திருகோணமலை மக்கேசர் விளையாட்டு மைதானம் மற்றும் இந்துக் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தியும் அபிவிருத்தியும், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் மீன்பிடி அமைச்சினால் இந்த வர்த்தகக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் 500 இற்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

# 2011இன் முதல் அரையாண்டில்

# அதிக இலாபமீட்டிய ஜனசக்தி

இலங்கையிலுள்ள சகல காப்புறுதி நிறுவன்ங்களுக்கு மத்தியில் ஜனசக்தி காப்புறுதி பி.எல்.சி (JIPLC) 2011இன் முதல் காலாண்டில் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.280 மில்லியனை பதிவு செய்து அதிக இலாபமீட்டிய காப்புறுதி நிறுவனமாக உள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியில் பெற்றுக்கொண்ட ரூ.145 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 93% வளர்ச்சியாக உள்ளதுடன் 19 போட்டியாளர்களைக் கொண்ட இத்துறையில் ஒரு சாதனையாகவும் உள்ளது.

இச்சாதனை தொடர்பாக ஜனசக்தியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டர் தெரிவிக்கையில்,

இலங்கை காப்புறுதி சந்தையில் காணப்படும் பாரிய போட்டித்தன்மை மற்றும் அதிகப்படியான போட்டியாளர்களின் மத்தியிலும் இந்தப்பெறுபேற்றை பெற்றுள்ளதில் நாம் பெருமையடைகிறோம் எனத் தெரிவித்தார்.

காப்புறுதியாளர்களுக்கு பல தரப்பட்ட உற்பத்திகளையும் சேவைகளையும் சிறப்பான சேவைத் தரத்துடன் இணைந்ததாக அதிகப் படியான நன்மைகளுடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் நிறுவனத்தின் தந்திரோபாயத் திட்டங்களின் காரணமாகவே இது சாத்தியமாயிற்று எனவும் மேலும் தெரிவித்த பிரகாஷ் சாப்டர், இதன் காரணமாக எமது தற்போதைய வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்ள முடியாய் இருந்ததுடன் 2011இன் முதல் அரையாண்டில் ரூ.1.4 பில்லியனுக்கு அதிகமான காப்புறுதிக் கோரிக்கைகளை வழங்கமுடியுமாய் இருந்தது என மேலும் தெரிவித்தார்.

எமது சாதனைகள் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை வென்றெடுக்க உதவின.

காப்புறுதி நிறுவனங்களுக்கு மத்தியில் மிகவும் அதிகளவிலான மூலதனத்தை கொண்டுள்ள நிறுவனமாக ஜனசக்தி காப்புறுதி உள்ளது.

இது சட்டப்படி தேவையான மூலதனத்தை விட 7.5 மடங்கு அதிகமாக ரூபாய் 1.49 பில்லியனைக் கொண்டுள்ளது.

ரூ.12 பில்லியனுக்கு அதிகமான சொத்துக்களை நிறுவனம் கொண்டுள்ளதுடன் இவற்றில் ரூ.4.1பில்லியன் அரசபிணைகளில் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் 100 இற்கும் அதிகமான இடங்களில் கிளை வலையமைப்பையும் கொண்டுள்ளோம் என சாப்டர் மேலும் தெரிவித்தார்.

சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் பெடி வீரசேகர தெரிவிக்கையில், ஜனசக்தி புல் ஒப்ஷன் ,ஜனசக்தி லைவ் அன்ட் லிமிட்டட் ,ஜனசக்தி ஆபரனய போன்ற எமது பிரதான குறியீடுகளின் நன்மைகளை அதிகரிப்பதே 2011இல் எமது பிரதான நோக்கமாக உள்ளது.

தற்போதைய பொருளாதார மற்றும் நுகர்வோர் முன்னுரிமைகளை கருத்தில் கொண்டு இதனுடன் மேலும் பல புத்தாக்கமான உற்பத்திகள் சேர்க்கப்படும்.

வேகமான சேவைவழங்கல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க விற்பனை அணியினை பலப்படுத்த தொழில்நுட்பத்தை நாம் மேம்படுத்தவுள்ளோம் எனத் தெரிவித்தார்.




இளம் விளம்பரத்துறை நிபுணர்களுக்கான யங் ஸ்பைக்ஸ் போட்டியில் ஒருங்கிணைக்கப்பட்ட போட்டி மற்றும் ஊடகம் ஆகிய இரண்டு பிரிவிலும் தலா 2 உறுப்பினர்கள் என 4 உறுப்பினர்கள் இம்மாதம் 18 முதல் 20ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஸ்பைக்ஸ் ஏசியா பெஸ்ரிவல் 2011இல் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6950.61 | 6990.33 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6297.12 | 6286.93 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 19,728.05

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** புளூ டைமன்ஸ்(X)(5.40), சிலோன் ரீ(7.70), ரேடியண்ட் ஜெம்ஸ்(114.20), டொல்பின் ஹோட்டல்ஸ்(62.00), மகாவலி றீச்(38.20).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** எஸ்.எம்.பி.லீசிங்(W), மிரமர்(263.90), சிங்கலங்கா(321.70), சிலிங்சிங்(1100.00), மோர்.சிப்பிங்(299.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.36 | 110.98 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.12 | 178.11 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 151.37 | 155.47 |
| சுவிஸ் பிராங் | 124.35 | 128.40 |
| கனேடிய டொலர் | 109.96 | 113.26 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.24 | 118.99 |
| சிங்கப்பூர் டொலர் | 89.46 | 92.03 |
| ஜப்பான் யென் | 1.40 | 1.44 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.39 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழகத்தை விட்டுச் செல்லும்

# கார் நிறுவனங்கள்

கார் உற்பத்தியில் உலக அளவில் கோலோச்சும் பெரும் நிறுவனங்கள் தமது புதிய ஆலையை அமைக்க குஜ்ராத் மாநிலத்தைத் தேர்ந்தெடுத்துள்ளமை தமிழக தொழில்துறை வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை நகரைச் சுற்றி ஏராளமான கார் தொழிற்சாலைகளும் கார்களின் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இருப்பதால் அமெரிக்காவின் கார் தொழிற்சாலைக்குப் பேர்போன டெட்ராய்ட் என்ற பகுதியுடன் சென்னை ஒப்பிடப்படுகிறது.

சென்னை அருகே பல ஆண்டுகளாக ஆலை வைத்து கார் தயாரிக்கும் ஃபோர்ட் நிறுவனம் குஜ்ராத் மாநிலத்தில் புதிய ஆலையை நிறுவும் திட்டத்தை சமீபத்தில் அறிவித்தது.

**போஜோ நிறுவனமும் போனது**


தற்போது ஐரோப்பாவின் 2-வது பெரிய கார் தயாரிப்பு நிறுவனமான போஜோ குஜ்ராத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் புதிய ஆலையை நிர்மாணிப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஆலையை தமிழகத்தில் அமைக்க அந்த நிறுவனத்துக்கும் தமிழக அரசுக்கும் இடையே 2 ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகள் நடந்திருந்தன.


கார் உற்பத்தி நிறுவனங்களின் முதல் தேர்வாக தமிழகம் ஏன் இல்லை என்ற கேள்விக்கு, இதற்கு மின் தட்டுப்பாடே முக்கிய காரணம் என்று பிக்கி என்ற இந்திய தொழில் வர்த்தக சம்மேளனத்தின் தமிழகத்திற்கான தலைவர் ரஃபீக் அகமது கூறினார்.

அதேநேரம் தமிழகத்தில் கார் உற்பத்திக்கு தேவையான பல அம்சங்கள் சாதகமாக இருப்பதால் மின் வசதி உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினாலேயே முதலீடுகள் தொடர்ந்து வரும் என்ற கருத்தும் நிலவுகிறது.

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

காசி ஆனந்தனின் அதிரடித் தொடர் 10





தமிழீழ மண்ணின் ஊர்ப் பெயர்கள், தெருப்பெயர்கள், வணிக நிலையப் பெயர்கள் அனைத்தும் ஒரு காலத்தில் தனித் தமிழ்ப் பெயர்களாய் தகதகத்தன. இன்று தமிழீழத்தின் அனைத்து தமிழ்ப் பள்ளிக் கூடங்களுக்கும் மீண்டும் சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவதாக சினமூட்டும் செய்திகள் வெளிவருகின்றன.

## ஒரு தேசிய இனத்தின் உயிர்க்கூறுகள் இன்று உடைந்து நொருங்கி நிற்கிறது





தமிழீழத் தேசிய இனத்தின் முதன்மை உயிர்க்கூறான தாய் மொழியாம் தமிழ் மொழி, சிங்கள அரசால் அழிவின் விளிம்பில் தள்ளப் பட்டிருக்கிறது.

ஒரு பொருள் இன்னொரு பொருளோடு நெருக்கமாக இயையும் போதில் கல்லோடு கல் உரசுதல், வெப்பக் கருத்தும் ஒளி கருத்தும் தோன்றுகின்றன என்றும்- 'இலங்குதல்' என்னும் ஒளி குறித்த தமிழ்ச் சொல் இப்படித் தான் தோன்றிற்று என்றும் மொழி இயலாளர்கள் சொல்கிறார்கள்.

இலங்குதல் என்னும் தமிழ்ச் சொல்லில் இருந்து தோன்றியதே 'இலங்கை' என்னும் சொல்லாகும். இச்சொல்லையே சிங்களவர்கள் 'லங்கா' ஆக்கினார்கள்.

சிங்கள மொழியில் 50 விழுக்காடு தமிழ்ச் சொற்கள் இருப்பதாக சிங்கள மொழி ஆய்வாளர்களே கூறுகிறார்கள். சிங்களத்துக்குச் சொல் தந்த தமிழையே சிங்களம் அழிக்கிறது.

கி.மு.3 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட சங்க காலத்தில் தமிழீழத்தில் இருந்து ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் தமிழ்நாடு வந்து தமிழ் பாடினார்.

இக்காலத்தில் சிங்களப் புலவன் எவனும் உலகில் இல்லை. ஏனெனில் சிங்கள மொழியே அன்று இல்லை. கி.மு.6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தர் தமிழ் படித்தார் என்று 'லலிதா விஸ்தாரம்' என்னும் வடமொழி நூல் கூறுகிறது. புத்தர் சிங்களம் படித்தார் என்று எந்தச் செய்தியும் இல்லை. ஏனெனில் புத்தர் காலத்தில் சிங்கள மொழி இல்லவே இல்லை.

புத்த மதத்தை நெறியாக அல்ல- வெறியாகக் கொண்ட இலங்கை இன்று புத்தர் படித்த தமிழுக்குப் பாடை கட்டிக் கொண்டிருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக இலங்கையில் இருந்த தமிழ் ஊர்ப் பெயர்களை மாற்றி சிங்களப் பெயர்கள் சூட்டி- தமிழ்மொழி அழிப்பிலும், தமிழர் நிலப் பறிப்பிலும் ஈடுபட்டு வருகிறது.

தேவன்துறை 'தொந்தறை' ஆகியது. மாத்துறை-'மாத்தறை' ஆகியது. இப்படி தமிழ்ப் பெயர்கள் அழிக்கப்பட்ட ஊர்கள் பல- மிகப் பல.

1956 இல் அன்று தலைமை அமைச்சராக இருந்த பண்டாரநாயக்கா இலங்கை நாடாளுமன்றத்தில் 'தனிச் சிங்களச் சட்டத்தை' (Only Sinhalar act) நிறைவேற்றினார்.

சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுமே அரசுப் பணி வழங்கப்படும் என்று அறிவித்தது சிங்கள அரசு.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டார்கள். தனிச் சிங்களப் பள்ளிக்கூடங்கள் கூட ஈழத்தில் திறக்கப்பட்டன. இதற்கு முட்டுக்கட்டை போட்டார் பிரபாகரன்.

பிரபாகரன் ஆயுதத்தோடு நின்ற 33 ஆண்டுகள் தான் தமிழ்மொழி சிங்கள ஆட்சியாளரின் இனவெறிப் பிடியில் இருந்து தப்பிப் பிழைத்தது.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் மீண்டும் பெயர் மாற்றி மகிழ்கிறார்கள். மல்லாகம் 'மளலகம' ஆகியிருக்கிறது.

புங்குடுதீவு 'புவன்குடிப' ஆகியிருக்கிறது....

ஒரு தேசிய இனத்தின் உயிர்க் கூறுகளான மொழி, தாயகம், மக்கள் இம்மூன்றும் உடைந்து நொருங்கி தமிழீழத் திரு நிலம் ஒடுங்கி நிற்கிறது.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### விதியின் சாகசம்

மெழுகுவர்த்தி உருகும் போது
ஊதுபத்தி உருக்கமாய் பார்த்தால்
பயனென்ன
எம் வாழ்வின் விருப்பங்கள்
ஒவ்வொன்றும்
மண்ணின் மேல் வரைந்து
கொள்ளும் சித்திரமே
மண்ணோடு மண்ணாகும்
நம் வாழ்வை
யாரால் வெல்லமுடியும்
உள்ளங்காலில் ஒட்டும் தூசிக்கு
பஞ்சின் கனம் வந்துவிடும்
பாவம் சுமக்கும் நம் நெஞ்சிற்கு
இரும்பின் கனம்
வராமலா போய்விடும்
உள்ளத்தின் ஞாபகங்கள்
உயிரின் தவிப்புக்கள்
குருதியின் குமுறல்கள்
மரணத்தின் ஓலங்கள்
இவை எம் வாழ்வின்
நிரந்தரங்கள்

எம்.கலைவாணி,
யாழ். பல்கலைக்கழகம்

### நீ!

ரோஜா இதழ் உதடுகளும்
வாள் போன்ற கண்களும்
முழுமதி போன்ற முகமும்
கொண்ட அதிசயமா நீ!

என் கவிதைப் பயிரிற்கு
கண்ணீர்த்துளியும் நீ!
என் அன்பின் குரலுக்கு
செவிகொடுத்ததும் நீ!

இப்போது எழுவது
உனக்கான உயிர்மூச்சு!
தினம் தினம் ஏங்குகிறேன்
உனைக் காண நான்

ஜீ.அபிராமி, மானிப்பாய்

### வேற்றுப்பாடு

உலகம் ஒன்று
உதிக்கின்ற சூரியன் ஒன்று
உழைப்பவர் உள்ளங்களின்
உதிரத்தின் நிறமே ஒன்று
இவ் உலகில் ஜாதி என்பது பலது
இவ் ஜாதியின் வேறுபாடு
உழைப்புக்காகவா
இல்லை உயர்வு தாழ்வின்
அந்தஸ்துக்காகவா

எம்.ஆர்.கனீபன்
புத்தூர் கிழக்கு

### அவரவர் பார்வையில்

குப்பைத்தொட்டி
தொட்டில்களைவிட
தொட்டிகளில்
அதிகம் குழந்தைகளின்
அழுகை
புத்தகம்
இரவு பகல் என்ற
இரண்டு தாள்களின்
பக்கத்திலும் மானிடரின்
கிறுக்கல்கள்
சமாதானம்
வெள்ளைப் புறாக்களுக்கு
மட்டும் தெரிந்த இரகசியம்
தினசரி
பத்திரிகையாளன்
படுகொலை
தலைப்புச் செய்திகளாகும்
தினசரிகள்

செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு-12

### துடுப்பின்றி

வாழ்க்கை எனும் கடலில்
துடுப்பின்றிப் படகோட்டும்
மாலுமி நான்...!
கடல் நடுவே கரைதெரியாது
தவிக்கின்ற பாவியானேன்
கிடைத்த படகும்
கவிழும் நிலை
கை கொடுக்க யாருமில்லை
கரை என்று தெரிந்தும்
உள்ளம் துள்ளியது மகிழ்வில்!
ஆனாலும் பாலைவனம்தான்
கிடைத்தது
பசுமை என் வாழ்வில்
என்றும் இல்லையென புரிந்தது

கொற்றையூர், மகே-மேனன்

### பெண்மை

அன்பின் இலக்கணம்
கருணையின் உறைவிடம்
காதலின் வசிப்பிடம்
தாய்மையின் பிறப்பிடம்
உணர்வின் அமைவிடம்
கற்பின் கலங்கரை விளக்கம்
நாணத்தின் நவரத்தினம்
இவை எல்லாம் பெண்ணின்
இலக்கியம் அல்ல
இலக்கணமே!

வி.கஜேந்திரன்
யா/நெல்லியடி, ம.ம.வி.

### இமயம் தொட...


உண்மைகளைத் தேடிய
உன் பயணத்தில்
எதையும் எதிர்கொள்ள
தயாராக இரு
உண்மைக்காகப்
போராடாவிடினும்
பொய்க்காக வாதாடாதே
ஆழப் புதைந்து கிடப்பினும்
உண்மைகள் இறப்பதில்லை

மாவை நா.கஜேந்திரன்

### மாற்றம் ஒன்றுக்காக...!

செந்தீயில் வேகும் எங்கள் மனங்களை
மரண வாசலுக்கு கொண்டு செல்கிறார்கள்
சினம் கொண்டு சீறினால்
நாங்கள் மறுகணமே பிணம்
அன்று ஓங்கிய கரங்களும்
உதைத்த கால்களும்
இன்று மீண்டும் எங்கள் பக்கமே
நாங்கள் பனைகளாய் இருந்து
பட்டபாடு போதும்
எங்கள் வடலிகளையாவது வளர விடுங்கள்
கந்தகம் பரவிய காற்றை
காக்கையும் வெறுக்கும்
ஏனெனில் அதுவும் ஒரு உயிர்தானே
எமதுரிமை பெறவென்று
எட்டியடி வைத்தோம்
தடைகளைத் தாண்டினோம்
முடிவு வருமென்றெண்ணினோம்
இடையில் பாரிய படுகுழி
பொறுத்த காலம் போதும்
உரிமை பெறுவோம்
மண்டியிட்டு மாற்றம் வேண்டாம்
மார்தட்டி பெறுவோம்

பா.விஸ்னுலட்சுமி, சங்கானை.



## மௌனத்தின் தேடல் – 87

### நிஜத்தில்...

விரல்களில்
உன்னை வைத்து
தீமூட்டினான் அவன்
உள்ளே சென்று
நீ–அவனை
புதைத்து
கொண்டிருப்பது
தெரியாமல்...

ஸிந்தா-வி
கோப்பாய்.

### எச்சரிக்கை

தன் சுகத்திற்காய்
ஏழையவன் தலையிலும்
நெருப்பை மூட்டிடும்
அதிகார வர்க்கமே,
உன் நெஞ்சறையினுள்
செல்லும் புகை
உன் வாழ்க்கைக்கு
நீயே விரிக்கும் வலை!

எஸ்.காவ்யா, வடமராட்சி

### வாழ்வு வளமாக

உயிரினை உறிஞ்சும்
புகையினை விலக்கி
நலமுடன் வாழ்ந்து
வாழ்வினை வளமாக்கு

மா.செழியன்
வேலணை-03

### என்ன சுகம்?

புகையிலையை ஏற்றுமதி
செய்துவிட்டு
அப்பாவி மக்களின்
உதிரத்தை
உறிஞ்சுகிறாயே
இதிலென்ன சுகத்தை
உணருகிறாய்?

டர்ஷிகா

### அதிகாரம்

போதைக்கு நீ
அடிமையானதால்–அது
உன்னை அடிமைப்படுத்தியது
அதிகாரம் கைமாறினால்
ஆண்டவா உனக்கும்
இந்நிலையே

பொ.ஞானகலை,
பருத்தித்துறை

### மனிதா

வகைவகையாய்
குடிக்கிறாய்
பகையே உனக்கு
அதுதான்
திகைக்காதே
மனிதா
புகைக்காதே

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### யோசித்துப் பார்

இன்று உனது சுகத்திற்காக
புகைப் பிடிக்கின்றாய்–ஆனால்
நாளை அதுவே உன்னை
புகையாக்கும் என்பதை–ஏன்
நீ மறந்து விடுகின்றாய்???

நிஸாந்தி,
நீர்வேலி.

### விழித்திரு!

கண்ணை மூடி
உன்னை மறந்து
புகைக்கும் நண்பா,
கண்ணைத் திறந்து பார்
உன் வாயிலிருப்பது
காலனின் தூதுவனே!

சி.சிவதர்சிகா

### ஓ மானிடா...!

நீ என்னை அனுபவிக்கும்
ஒவ்வொரு நிமிடமும்
நான் உந்தன் ஆயுளின்
ஒவ்வொரு நிமிடத்தை
குறைக்கின்றேன்–என்று
நீ எப்போது அறிவாய்?

நெய்தல்
தேன்மொழி

### மூட்டியதீயும் மூடனும்

மூட்டியதீ
ஒரு முனையில்
மூடன் மறுமுனையில்

குளப்பிட்டி
க.அருமைநாயகம்

### மனிதம் எங்கே?

அரிது அரிது மானிடராதல்
அரிது என அன்றுரைத்த
ஔவையே!
மதம்பிடித்த சில
மனிதர் மத்தியில் இன்று
மதிப்பற்று மிதிபடும்
மனிதமதை பாராயோ?

யாழ் நிலா
யாழ்ப்பாணம்

### யார் நீ!

விந்தைகள் புரியும்
வேடிக்கை வினோதனா?
தந்தி மூலம் யாவும்
தனதாக்கிடும் தன்னாதிக்கனா?
எந்திர வாழ்வதனில்
எல்லாமே புரியும் எந்திரனா?
மந்திர வித்தை காட்டி
மக்களை கிலிகொள்ளவைக்கும்
மர்மமனிதானா???

போ.புனிதன், வரியப்புலம்


### மாற்றம்

வஞ்சக உலகிலே
இது புதிதல்ல
புகை பிடிக்கும் மனிதா
கொஞ்சம் விழித்துப்பார்
உன் வாயில் இருப்பது
உயிரை குடிக்கும் அற்கோல்
அருமை உடம்பு
அழிந்து விடாது பார்...

ஜனகன் கிஷா,
அல்வாய் வடக்கு.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 88

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.09.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# அடக்குமுறை சட்டங்கள் தொடர்ந்தும் அமுலில்

## ஐ.தே.க.தெரிவிப்பு

அடக்குமுறைச் சட்டங்கள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு காண்பிக்கும் நோக்கில் அரசாங்கம் அவசர காலச் சட்டத்தை நீக்கிய போதிலும் வேறும் வழிகளில் அடக்குமுறைச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டம் பயங்கரவாத சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு போதுமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உத்தேசிக்கப்பட்ட சட்டத் திருத்தங்களின் மூலம் சந்தேக நபர்களை காலவரையறையின்றி நீண்டகாலத்திற்கு தடுத்து வைக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுவர் காப்பகங்களில் உள்ள சிறுவர்களே அதிகளவில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் காப்பகங்களில் இருக்கும் சிறுவர்கள் பெருமளவில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாகவும் அதனால் காப்பகங்களை மூடி விட்டு சிறுவர்களை குடும்பங்களிடம் பொறுப்பு கொடுத்து குடும்ப சூழலில் அவர்கள் வளர உதவ வேண்டும் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள 90 சிறார்களும் கிளிநொச்சியில் உள்ள 50 சிறார்களும் இதுபோல குடும்பங்களின் பராமரிப்புக்காக கொடுக்கப்பட்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை குழந்தைகள் சிறப்பான முறையில் வளர குடும்ப சூழல் இன்றியமையாதது என்ற கருத்தாக்கம் பலரிடம் இருந்தாலும் சிறுவர் காப்பகங்களை மூடுவது என்பது நடைமுறை சாத்தியமான விடயமாக இருக்காது என்று ஆதரவற்ற சிறார்களை பராமரித்து வரும் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு புறநகர் பகுதியில் செயற்பட்டு வரும் கோகுலம் சிறுவர் காப்பகத்தின் பொறுப்பாளர் நந்தராணி தேவி இது பற்றி கருத்து தெரிவிக்கையில்,

தமது காப்பகத்தில் உள்ள 125 குழந்தைகளையும் தான் தினந்தோறும் சந்திப்பதாகவும் தமது நேரடி கண்காணிப்பில் சிறுவர்களை வைத்திருப்பதன் மூலம் அவர்களை பாதுகாப்பாக பராமரிக்கக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உறவினர்களின் பொறுப்பில் விடப்படும் குழந்தைகளும் குழந்தையில்லாத தம்பதியினர் தத்தெடுக்கும் குழந்தைகளும் கூட துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதை தாங்கள் அவதானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் சுமார் 20 ஆயிரம் சிறுவர்கள் 470 காப்பகங்களில் வளர்ந்து வருவதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது. இதில் வெறும் 22 காப்பகங்கள் மட்டுமே அரசால் நடத்தப்படுகின்றன.

மீதியுள்ளவை தனியாராலும் மதச் சார்பு அமைப்புக்களாலும் நடத்தப்படுகின்றன. (ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

22 வருட அனுபவம்

SEPT. 2011 TO FEBRUARY 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator -
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011


# 2011.09 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1297-ஸ்டேர்லிங் பாலம் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஸ்கொட்லாந்துப் படையினர் ஆங்கிலேயரைத் தோற்கடித்தனர்.

★ 1541-சிலியின் சண்டியாகோ நகரம் மிச்சிமாலொன்கோ தலைமையிலான பழங்குடிகளினால் அழிக்கப்பட்டது.

★ 1609-ஹென்றி ஹட்சன் மான்ஹட்டன் தீவைக் கண்டுபிடித்தான்

★ 1708-சுவீடனின் பன்னிரண்டாம் சாள்ஸ் மன்னன் தனது மொஸ்கோவின் மீதான படையெடுப்பை ஸ்மொலியென்ஸ்க் என்ற இடத்தில் இடைநிறுத்தினான். அவனது படைகள் 9 மாதங்களின் பின்னர் தோற்கடிக்கப்பட்டன.

★ 1709-பிரித்தானியா,நெதர்லாந்து, ஆஸ்தி ரியா ஆகியன பிரான்ஸ் மீது போர் தொடுத்தன.

★ 1802-பிரான்ஸ் சார்டீனியா பேரரசை இணைத்துக் கொண்டது.

★ 1889- யாழ்ப்பாணத்தில் இந்துசாசனம் என்ற ஆங்கிலப் பத்திரிகை டி.பி.செல்லப்பா பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.

★ 1893-முதலாவது உலக சமய நாடாளுமன்ற மாநாடு சிக்காகோவில் ஆரம்பமானது.

★ 1906-மகாத்மாகாந்தி சத்தியாக்கிரகம் என்ற சொற்பதத்தைதென்னாபிரிக்காவில் வன்முறையற்ற இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த ஆரம்பித்தார்.

★ 1914- அவுஸ்திரேலியா புதிய பிரித்தானியத் தீவினுள் நுழைந்து அங்கு நிலை கொண்டிருந்த ஜேர்மனியப் படைகளை வெளியேற்றியது.

★ 1916-கனடாவின் கியூபெக் பாலத்தின் மத்திய பகுதி உடைந்து வீழ்ந்ததில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1919-ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் ஹொண்டுராசினுள் நுழைந்தனர்.

★ 1926-பெனிட்டோ முசோலினி மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.

★ 1940- இரண்டாம் உலகப் போரில் பக்கிங்ஹாம் அரண்மனை ஜேர்மனியினரின் வான் தாக்குதலில் சேதமடைந்தது.

★ 1944-இரண்டாம் உலகப்போர்: ஜேர்மனியின் டார்ம்ஸ்டாட் நகரில் இடம்பெற்ற பிரித்தானியரின் குண்டுவீச்சில் 11 ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1945-இரண்டாம் உலகப்போரில் போர்ணியோ தீவில் ஜப்பானியரினால் அடைக்கப்பட்டிருந்த போர்க்கைதிகளை அவுஸ்திரேலியப் படையினர் விடுவித்தனர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 2 ஆயிரம் பேர் செப்டெம்பர் 15 இல் கொல்லப்படவிருந்தனர்.

★ 1961-டெக்சாசை 4 ஆம் கட்ட சூறாவளி கார்லா தாக்கியது.

★ 1968- பிரான்ஸ் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 95 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1973-சிலியின் மக்களாட்சி அரசு இராணுவப் புரட்சியில் கவிழ்க்கப்பட்டது. ஜனாதிபதி சல்வடோர் அலெண்டே கொல்லப்பட்டார். இராணுவத் தலைவர் ஆகுஸ்டோ பினொச்சே ஆட்சியைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சியை நடத்தினார்.

★ 1978-அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத், இஸ்ரேல் பிரதமர் பெகின் ஆகியோர் மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க காம்படே விட்டில் சந்தித்தனர்.

★ 1982-பாலஸ்தீன அகதிகளின் பாதுகாப்புக்கென வந்திருந்த பன்னாட்டுப் படைகள் பெய்ரூட் நகரை விட்டு அகன்றனர். ஐந்து நாட்களின் பின்னர் அங்கு பல்லாயிரக்கணக்கான அகதிகள் கொல்லப்பட்டனர்.

★ 1989-ஹங்கேரிக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான எல்லை திறந்து விடப்பட்டதில் ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மனி மக்கள் தப்பியோடினர்.

★ 1992-ஹவாய் தீவை சூறாவளி இனிக்கி தாக்கியதில் தீவு பலத்த சேதத்தை சந்தித்தது.

★ 1997-ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்கிய தனியான ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தை அமைக்க ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களித்தனர்.

★ 2006-ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1862- ஒ ஹென்றி , ஆங்கில எழுத்தாளர் (இ.1910)

★ 1917-பேர்டினண்ட் மார்க்கொஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (இ.1989)

★ 1982-ஸ்ரேயா, தென்னிந்திய நடிகை

### இறப்புக்கள்

★ 1921-சுப்பிரமணிய பாரதியார் (பி.1882)

★ 1948-முகம்மது அலிஜின்னா, பாகிஸ்தான் தாபகர்.

★ 1971-நிக்கிட்டா குருசேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (பி.1894)

★ 1973-சல்வடோர் அலெண்டே, சிலியின் ஜனாதிபதி (பி.1908)

★ 2009-யுவான் அல்மெய்டா, கியூப் புரட்சியாளர் (பி.1927)



2001 ஆம் ஆண்டு இந்நாளில் தான் நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் 2 ஆயிரத்து 974 பேர் கொல்லப்பட்டனர்.

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

# பதவியில் மாற்றம் ஏற்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் அத்தியட்சகர் ஹிராந்த புத்திக்க சிறிவர்தனவை ஊடகப் பேச்சாளராக நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக தற்போது கடமையாற்றி வரும் பிரசாந்த ஜயகொடி ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணிகளில் இணைந்து கொள்ள உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கு ஹிராந்தவை நியமிப்பதற்கு பொலிஸ் திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஹிராந்த 2001ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-4)

# உலகப் பொருளாதாரம் சவால்களை எதிர்நோக்கி வருகின்றது

## சர்வதேச நாணயநிதியத் தலைவர் தெரிவிப்பு

உலகப் பொருளாதாரம் சவால்களை எதிர்நோக்கி வருவதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டின் லகார்டே தெரிவித்துள்ளார்.

பொருளாதார சரிவுகளிலிருந்து மீட்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் முதனிலையான பொருளாதாரங்களை கொண்டு நாடுகளின் முக்கியமான மாநாடுகளில் ஒன்றான ஜீ 7 மாநாடு நடைபெறவுள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாரிய பொருளாதார நெருக்கடிகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் இதனால் உலக நாடுகள் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் 450 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வேலைவாய்ப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# தோட்ட தொழிலாளர்களின் சம்பளப் பணம் கொள்ளை

நாவலப்பிட்டி, நாகஸ்தென்ன மற்றும் கந்தல்ஓயா தோட்டங்களின் தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக கொண்டுசெல்லப்பட்ட 26 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தப் பணம் நேற்று முன்தினம் மாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி குறிப்பிட்டார்.

தோட்ட அதிகாரி ஒருவர் உட்பட்ட மேலும் இரண்டு தொழிலாளர்களுக்கான சம் பள தொகையை கொண்டு சென்றபோது ஆயுதமேந்திய சிலர் பணத்தைக் கொள்ளை யிட்டுத் தப்பிச் சென்றதாக கூறியுள்ளனர்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ஶ்ரீ-2)

# கடமையை சரிவர நிறைவேற்றாத பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

தாக்குதல்களுக்கு இலக்காகின்ற ஊடகவியலாளர்கள் தொடர்பில் கடமையை சரிவர நிறைவேற்றாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு இலக்கானதாக ஆணைக்குழுவின் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா கூறினார்.

சட்ட ரீதியான தமது பொறுப்புகளை அரச உத்தியோகத்தர்கள் சரிவர நிறைவேற்றாதுவிடின், அது அரசியல் அமைப்பின் பிரகாரம் அடிப்படை உரிமை மீறலாக கருதப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸார் நியாயமாக நடந்து கொள்ளாத பட்சத்தில் அது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யமுடியும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவிக்கின்றார். (ஶ்ரீ-2)

# தரமற்ற பெற்றோலுக்கான இழப்பீடு அடுத்த வாரம் கையளிப்பு

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

தரமற்ற பெற்றோல் விநியோகத்தினால் பழுதடைந்த வாகனங்களின் உரிமையாளர்கள் இழப்பீடு பெறுவதற்காக பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க முடியாவிட்டால் அதற்குப் பதிலாக சத்தியக் கடதாசி ஒன்றை வழங்க முடியுமென பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் வினவியதையடுத்தே அமைச்சர் இந்த பதிலை அளித்தார்.

அடுத்த வாரம் அளவில் இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ஶ்ரீ-4)

# சந்நிதிக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



## சந்நிதியான் தேரோட்டம் காணீர்

நதிக்கரை வீதியில் சந்நிதியான் தேரோட்டம்
நாடியே பக்தர்கள் தேடியே வந்தனர்
மதி கெட்ட கொடுஞ்சூரனை அழித்திட
மகாதேவி அன்னை ஞானவேல் வழங்கிட
துதி செய்து வேலதனை தாங்கிய வடிவேலன்
தேவசேனாதிபதியாக போராடி
சதி செய் அசுரனை கொன்றொழித்து முத்துச்சிரிப்புடன்
வித்தக்குமாரன் சித்திரத்தேரினில் வருகின்றான்

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு.

## நற்தீர்வு அருளுவாயே!

அன்னதானக் கந்தனெனத் தொண்டைமான்
ஆற்றங் கரைதனிலே அமர்ந்தவனே!
சந்நிதானம் தனில்வேல் வடிவினனாய்ச்
சரவண பவனே நீ விளங்குகின்றாய்!
என்றுதான் எம்துயரம் தீருமப்பா?
எல்லாமே உன்கையில் உள்ளதப்பா!
இன்று தேர் தனிலேறி வருபவனே!
இவ்வையகத்தில் நற்தீர்வு அருள்வாயே!

நாயன்மார்கட்டு, ப.மகேந்திரதாசன்.

## சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி வேலா தேரேறி வருக

சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி வேலா
தேரேறி வருக
சண்முகசீலா சங்கரன் பாலா சக்தி வடிவேலா
தேரேறி வருக
சந்ததம் கீதத் திருப்புகழ் பாடி சிந்தை மகிழ
தேரேறி வருக
சரண மலரடி மறவா வரம் தரவே சந்நிதியானே
தேரேறி வருக
சங்கரன் காதில் தத்துவம் கூறிய சிங்கரா வேலா
தேரேறி வருக
சர்வமெங்கும் சாந்தி, சமாதானம் நிலவ
தேரேறி வருக
சிங்கார மயிலேறும் பெருமானெம் குருநாதா
தேரேறி வருக

தொல்புரத்தூர், க.லோகேஸ்வரன்

## மணித்தேரேறி அருள்சுரப்பாய்

அன்பருளங் குடிகொண்ட
ஆறுபடை வீடுடையான்
அருள் சந்நிதியில் குடி கொண்ட
ஆறுமுக வடிவேலன்
கருணை வடிவாய்
வீற்றிருப்பான்
கரங்கள் பன்னிரெண்டும் கொண்டான்
கவிபாடி அழைத்திடவே
கார்த்திகேயா கவலை
போக்கி காத்திடையா!

செ.ரவிசாந்த், குப்பிளான்.

## இலக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஞானம் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரனால் நடத்தப்படும்இலக்கிய சந்திப்பொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை கேட்போர் கூடத்தில் மூத்த எழுத்தாளர் சி.வன்னியகுலம் தலைமையில் நடைபெறும்.


இச்சந்திப்பில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 8 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெற்று திருத்தேர் வீதியுலா இடம்பெறும். (ஸ்ரீ-2)

## பேருந்து தடம்புரண்டு விபத்து; பயணிகள் மயிரிழையில் தப்பினர்



கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்நேற்றுமுன்தினம்காலை7மணியளவில் கண்டி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மேற்படி தனியார் பேருந்து யாழ். நோக்கி வந்து கொண்டிருந்தபோது இப்பேருந்துக்கு நேராக திடீரென முதியவர் ஒருவர் துவிச்சக்கரவண்டியில் வந்துள்ளார்.குறித்த முதியவருக்கு விபத்து ஏற்படாமல் தடுக்க வாகனத்தின் சாரதி இப் பேருந்தை வீதியோரத்தை நோக்கி சடுதியாக திருப்பிய போது மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

பேருந்து தடம்புரண்டு சரிந்திருந்ததால் கண்ணாடிகளை உடைத்துபயணிகள்பத்திரமாக மீட்கப்பட்டனர். விபத்திற்கு காரணமான துவிச்சக்கரவண்டியில் வந்த முதியவர் தலைமறைவாகியுள்ளார். (ஸ்ரீ-4-8)

## இன்னிசை நிகழ்வில் ஏற்பட்ட மோதல் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

வடமராட்சி மாலுசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகராலயத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி இரவு நடைபெற்ற இன்னிசை நிகழ்வில் இரு கிராமங்களுக்கிடையில் மோதல் இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து இரு கிராமங்களைச் சேர்ந்த 54 பேரை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

இதில் அல்வாய் கிழக்கு அத்தாயைச் சேர்ந்த 37 பேரும் துன்னாலை வேம்படியைச் சேர்ந்த 17 பேரும் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதிதிருமதி ஸ்ரீநிதி-நந்தசேகரம் இவ்வழக்கை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-4-24)

## சித்திரத் தூவானம் சிறுவர் சித்திரக்காட்சி

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தை பயில்கின்ற சிறார்களின் ஓவியங்களைக் கொண்ட சித்திரத் தூவானம் என்னும் சித்திரக்காட்சி இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இல.15, றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலாமுற்ற வளாகத்தில் இடம்பெறும்.

இரு நாட்கள் இடம்பெறவுள்ள இக் காட்சியில் இன்றைய ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.புனித ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் ரி.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## வாரம் ஒரு தகவல்

### கைவசம் ஒரு கலை!

"ஆ...! ஈ...! ஊ...!"

"அரிச்சுவடி படிக்கிறீர்களா?"

"இல்லை... கராத்தே கற்றுக்கொள்கிறேன்!"

"கற்றுக்கொள்ளுங்கள்... கைவசம் ஒரு கலை இருக்கிறது நல்லது தான்!"

"கையையே ஆயுதமாக உபயோகப்படுத்தக்கூடிய இந்தக் கலையைக் கண்டுபிடித்தவர் உண்மையிலேயே பெரிய ஆள்தான் சேர்!"

"அவர் யார் என்று நினைக்கிறீர்கள்...? எங்களுடைய ஆள்தான்! இந்தியர்! போதி தர்மா-என்று பேர்! பௌத்த துறவி! ஆறாம் நூற்றாண்டிலேயே சீனாவுக்குச் சென்று தங்கிவிட்டாராம். அவர் இறந்ததற்கு பின்னர் இந்தக் கலையைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை! அதன் பின்னர் பதினாறாம் நூற்றாண்டிலே ஜிச்சின் பினசோஷி என்பவர் மிகவும் கஷ்டப்பட்டு இந்தக் கலையைப் பிரபலப்படுத்தினார். 1916 ஆம் ஆண்டு பலருக்கு முன்னால் இதுதான் கராத்தே-என்று செய்து காட்டினார். கராத்தே என்று பேர் வைத்தவரும் அவர்தான். அதற்கு பின்னர் முதல் உலக கராத்தே போட்டி 1970 இல் பாரீசில் நடைபெற்றது! தற்பொழுதெல்லாம் நிறைய நடக்கின்றது!"

"நான் அது மாதிரியெல்லாம் போட்டியில் கலந்து கொள்வதற்காக கராத்தே கற்றுக்கொள்ளவில்லை சேர்!"

"எதற்காக...?"

"ஹி...உங்களிடம் சொல்வதற்கு என்ன... கொஞ்சம் அருகே வாருங்கள்...!"

"ம்... சொல்லுங்கள்!"

"...அடுத்த மாதம் எனக்குத் திருமணம்... அப்பெண்ணுக்குக் கராத்தே தெரியும்! அதனாலே ஒரு தற்காப்புக்காக நானும் இதைக் கற்றுக்கொள்கின்றேன்..! இருந்தாலும் இது ஓரளவுக்குத்தான் எனக்குக் கைகொடுக்கும் என்று நினைக்கிறேன்!"

"எப்படி?"

"இந்தக் கராத்தே கலையிலே கையை மட்டும்தானே ஆயுதமாக உபயோகப்படுத்த வேண்டும்...!"

"ஆமாம்!"

"ஆனால்... அந்தப் பெண் தேவையேற்படும் போது, இன்னொன்றையும் ஆயுதமாக உபயோகப்படுத்துவதாக கேள்வி...!"

"எதை?"

"பல்லை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

11.09.2011
(ஆவணி 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 06.02 மணிக்கு .
சதுர்த்தி பிற்பகல் 1.49 மணிவரை
சதயம் பின்னிரவு 5.43 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
நான்காம் ஆவணி ஞாயிறு.
செல்வச் சந்நிதி முருகன் தேர்

**மேடம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள். எடுத்த காரியம் கைகூடும். வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள். சுப நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும். நண்பர்களின் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப் படுவீர்கள். பிரயாணங்களால் நன்மையுண்டு.

**கடகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள். தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். செலவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**சிங்கம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும். தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும். கருத்து வேறுபாடுகள் அகலும். பயணங்களால் குதூகலம் காணவேண்டிய நாள்.

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முன்வருவீர்கள். தொழிலில் இருந்த மனஸ்தாபம் அகலும்.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். பூர்வீகச் சொத்துகளால் நன்மையுண்டு. போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** கந்தன் வழிபாடு பெருமை தரும். சந்தித்த நபர்களினால் சந்தோசம் காண வேண்டிய நாள். உறவினர் வருகையுண்டு. சொத்துகள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற கோயிலுக்குச் செல்லவேண்டிய நாள். நீண்ட நாளைய பிரச்சினைகள் முடிபுக்கு வரலாம். அயலவர்களுடன் நட்பு நிலை அதிகரிக்கும்.

**மகரம்** கந்தனை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள். எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள். இல்லத் தேவைகள் பூர்த்தியாகும். பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிபுக்கு வரும். தொழில் நலன் கருதி புதிய கூட்டாளிகளைச் சேர்க்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள். உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம். மூத்த சகோதரர்களால் உதவிகள் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பர். வருமானம் திருப்தி தரும்.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 105 | 140 | 90 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 100 |
| தக்காளி | 25 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 30 | 80 | 30 |
| கரட் | 50 | 60 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 70 |
| பாகற்காய் | 80 | 70 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 70 |
| கரணைக்கிழங்கு | -- | 130 | 90 |
| பயற்றங்காய் | 90 | 60 | 100 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | 10 | 20 | 30 |
| கறிமிளகாய் | 35 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 160 | 160 |
| போஞ்சி | -- | 130 | 110 |
| கத்தரி தம்புள்ள | -- | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 130 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# சந்தேகநபர்களை 48 மணிநேரம் தடுத்து வைக்கும் சட்டத்திருத்தம் அமுல்படுத்தப்படும்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

சந்தேகநபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கும் சட்டத் திருத்தம் அமுல்படுத்தப்படும் என பதில் அமைச்சரவைப் பேச்சாளரும் பிரதியமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் இந்த சட்டத் திருத்தம் நாடாளுமன்றில் மீள சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களை விசாரணை செய்வதற்கு இந்த சட்டத்திருத்தம் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் திருத்தச் சட்டக் கோவை தொடர்பான யோசனைத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இதனால் சட்டத் திருத்தம் தொடர்பான விவாதத்தை பிறிதொரு தினத்தில் நடத்துவதென பிரதி சபாநாயகர் அறிவித்திருந்தார். எனினும் கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் சில திருத்தங்களை செய்து குறித்த சட்டக் கோவையை மீள நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நிறைவடைந்த போதிலும் சில தீய சக்திகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை கொலை முயற்சி, கொலை, பாலியல் துஷ்பிரயோகம், கொள் ளை, கப்பம் கோரல், கடத்தல், ஆயுத வன்முறைகள் உள்ளிட்ட 15 வகையான குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## எலுமிச்சை மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய மரநடுகை வாரத்தை முன்னிட்டு கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டு கழகம் நல்லூர் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து கொக்குவில் கிழக்கு (ஜே/126) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு 600 நல்லின எலுமிச்சை மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# இம்மாதத்தில் டெங்குகாய்ச்சலால் பாதிக்கப்பட்ட 297 பேர் பதிவு

(கொழும்பு)

இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 297 பேர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேகாலப்பகுதியில் கண்டி மாவட்டத்தில் மாத்திரம் 59 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 17 ஆயிரத்து 355 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறுகின்றது.

இந்த காய்ச்சால் பீடிக்கப்பட்ட 126 பேர் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் உயிரிழந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே டெங்கு காய்ச்சலால் கூடுதல் எண்ணிக்கையிலானோர் பீடிக்கப்பட்டுள்ளதுடன் இந்த மாவட்டத்தில் ஆறாயிரத்து 750 பேர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் இரண்டாயிரத்து 696, களுத்துறை மாவட்டத்தில் 933 பேரும் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான நியமங்களில் சட்டவரையறை

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

சட்டமூலமொன்றின் மூலம் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான நியமங்களில் சட்ட வரையறையொன்றை ஏற்படுத்தவுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மினுவாங்கொடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய உயர்கல்வி அமைச்சர், மாலபேயில் மாத்திரமின்றி கொழும்பிலும் கண்டியிலும் புதிய தனியார் மருத்துவ கல்லூரிகளை அமைப்பதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உபவேந்தர் மற்றும் கல்வி பணிப்பாளர்களுடனான வருடாந்த குழுக்கூட்டம் நேற்று முன்தினம் உயர்கல்வி அமைச்சர் தலைமையில் மினுவாங்கொடையில் நடை பெற்றது.

ஆசியாவில் அறிவு கேந்திரத்திற்கான அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களின் அழுத்தம் என்ற தொனிப்பொருளில் இக்கூட்டம் நடைபெற்றது. அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களை அங்கீகரிக் கக்கூடிய விதத் தில் அவற்றின் தரத்தைப் பேணுதல் மற்றும் அவற்றை பரிசீலனை செய்து பதிவு செய்தல் ஆகிய விடயங்களுக்கு முறைமையொன்று அவசியமாகும் என்று உயர்கல்வி அமைச்சர் கூறினார்.

அதனை நிறைவேற்றுவதற்காக இலங்கையினுள் சபையொன்றை உருவாக்க வேண்டியுள்ளதாகவும் சட்டமூலமொன்றின் மூலம் அரச சார்பற்ற உயர்கல்லி நிறுவனங்கள் தொடர்பான விடயத்தில் சட்ட வரையறைகளை ஏற்படுத்துவது அதன் பிரதான நோக்கமாகும் என்றும் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க குறிப்பிட்டார்.

எனவே இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தினை உறுதிப்படுத்த முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# சிங்கராஜவனப் பகுதிகளில் வெள்ளையினக் குரங்குகள்

நெலுவை மற்றும் தெனியாய அண்மித்த சிங்கராஜ வனப் பகுதிகளில் ஒருவகை வெள்ளை இனக் குரங்குகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

காலி வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே இந்தக் குரங்கு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கருங் குரங்குகள் தொடர்பாக நாட்டிற்குள் காணக்கிடைக்கின்ற நான்கு வகைகளில் ஒன்றான தென் மாகாணத்தின் கருங்குரங்கினம் தொடர்பாக காலி வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கம் ஒரு வருடத்திற்கு முன்னர் ஆய்வொன்றை மேற்கொண்டது.

இந்த ஆய்வின் போது சிங்கராஜவனப் பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வெள்ளை இன குரங்குகள் நடமாடுவதை அவதானித்துள்ளதாக பிரதேச கித்துல்பாணி சேகரிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட காலி வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கத்தினர் சிங்கராஜவனத்தின் லங்காகம மற்றும் வத்துகல ஆகிய பகுதிகளில் இந்த வெள்ளைக் குரங்கினங்களை கண்டுபிடித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் நிலவும் தாமதம் குறித்து ஜனாதிபதி கவனம்

(கொழும்பு)

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை பொறுப்பேற்கும் போது இழப்பீட்டுத் தொகையை வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

2012 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முன்னோடி பேச்சுவார்த்தையின்போது இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள், இடர் முகாமைத்துவம், காணி மற்றும் காணி அபிவிருத்தி மீள்குடியேற்றம் ஆகிய அமைச்சுக்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

பாவனையாளருக்கு விநியோகிக்கப்படும் நீர்க் கட்டணப் பட்டியலை விட கூடுதலான தொகையை நீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோகத்திற்காக செலவிடப்படுவதாக இதன் போது கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் குறித்து பொதுமக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் குறித்து எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் நீர் வீண்விரயமாவதை தடுப்பதற்கான யோசனைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை பொறுப்பேற்கும் போது இழப்பீடு வழங்குவதில் ஏற்படும் தாமதம் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது கவனம் செலுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

VACANCY

(கிளிநொச்சி காரியாலயம்)

union assurance

Trust in your tomorrow, today.

உங்கள் கடுமையான உழைப்புக்கு தகுந்த வெகுமதிகளுடன் கூடிய வருமானம் கிடைக்கக் கூடிய கௌரவம்மிக்க, நிரந்தர தொழில் துறையில் முன்னேற விரும்பினால் நீங்கள் எதிர்பார்க்கும் அருமையான சந்தர்ப்பம் இதுதான். வாருங்கள் உலகத்தரம் வாய்ந்த தொழில்துறை நிபுணர்களோடு இணைந்து நன்மைகளை அடைந்து கொள்வதோடு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகளையும் அபிவிருத்தி வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் தொழில்துறை முன்னேற்றத்துக்கான உறுதியான எதிர்பார்ப்புக்களோடு கவர்ச்சிகரமான கொடுப்பனவு. தொழில் தேடுவதை நிறுத்துங்கள். காப்புறுதி ஆலோசகராக யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இணைந்து கொள்ளுங்கள். வாருங்கள் வாய்ப்பினை அடைந்து கொள்ளுங்கள்.

**காப்புறுதி ஆலோசகர் பதவிக்கான தகுதிகள்**

1. க.பொ.த (சா/த)ல் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. வயது எல்லை 22-50
3. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
4. நிரந்தர வசிப்பிடம் கிளிநொச்சி/முல்லைத்தீவு மாவட்டம்.

**அபிவிருத்தி உத்தியோகத்தர்**

1. க.பொ.த (உ/த)ல் சித்தியடைந்திருத்தல்.
2. க.பொ.த (சா/த)ல் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
3. வயது எல்லை 25-50.
4. வியாபாரத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
6. நிரந்தர வசிப்பிடம் கிளிநொச்சி/முல்லைத்தீவு மாவட்டம்.

மேற்குறிப்பிட்ட தகுதியுள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு 15/09/2011 (வியாழன்) ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்விச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

அம்பாள் நகையகம்
மேல்மாடி, ஏ9 வீதி,
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

முகாமையாளர் கிளிநொச்சி பிரதேசம்
Mobile No :-0773145259

(6101)

ஆலையில்லா ஊரில் இலுப்பம்பூ சர்க்கரையாம்.

–தமிழ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வைரப்பனைகள் தறிபட்டால் வடலிகளே பனைகளாகும்

இறைவனின் படைப்பில் பருவங்கள் மிகவும் முக்கியமானவை, ஆறறிவு படைத்த மனிதர்கள் முதல் ஓரறிவு படைத்த மரங்கள் வரை பருவ வளர்ச்சிக்கு உட்பட்டவை.

குழந்தைப்பருவம், பாலபருவம், கட்டிளமைப் பருவம், முதுமைப்பருவம் என்றவாறு மனிதர்கள் பருவங்களைச் சந்திப்பது போல மரங்களும் தமக்கான பருவங்களைக் கொண்டுள்ளன.

பருவங்கள் என்பன தனித்து காலத்தால் மட்டும் ஏற்படுவன அல்ல. சூழலின் அனுபவங்களைப் புரிந்து கொள்வதன் ஊடாகவும் வளர்ச்சிப்பருவங்கள் மாற்றமடைகின்றன என்பது உணர்தற்குரியது.

அவ்வகையில் பனைமரத்தை எடுத்துக் கொண்டால், வடலிப்பருவம் என்பது மிகவும் சோத்தியான பருவத்தை குறிப்பதாகும். வடலி வைரப்பனையாக வேண்டுமாயின் அதற்கு மிக நீண்டகாலம் எடுக்கும்.

வடலிப்பனையின் கருக்கும் வைரப்பனையின் கருக்கும் ஒரே தன்மை உடையன அல்ல.

வடலியின் கருக்கு ஆபத்தானது மட்டுமல்ல. ஓலையை விட, மட்டையைவிட, கருக்கிற்கு முதன்மை கொடுப்பதிலேயே வடலிகள் முண்டியடிக்கும். ஆனால் வைரப்பனைகள் அப்படியல்ல.

அவை கருக்கிற்கான முதன்மையைக் குறைத்து மட்டை, ஓலை, சார்வு என்பவற்றுக்கு முதன்மை தருவதோடு தனது உடலின் வைரத்தையும் மனிதர்களின் பயன்பாட்டுக்காய் தானம் செய்து விடும்.

இவ்வாறு தன் உடலைத்தானம் செய்யும் வைரப்பனைகள்போல அரசியல்தலைவர்களும் இருக்கவேண்டும்.

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றை ஒரு கணம் எடுத்துப்பார்த்தால் தந்தை செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன், தளபதி அமிர்தலிங்கம் இப்படி ஒரு பெரிய பட்டியலைத் தயாரிக்க முடியும்.

இவர்கள் வைரப்பனைகள் போல தங்களை மக்களுக்குத் தானம் கொடுக்கும் தலைவர்களாக இருந்தார்கள்.

அதன் காரணமாக தமிழ்மக்கள் அரசியலில் அக்கறைக்கொண்டிருந்தனர். எந்தப்பிரச்சினையையும் அடித்துக் கூறினார்கள்.

ஆனால் நிலைமை இப்போது அதுவல்ல. வைரப்பனைகள் தறிபட்டு, அல்லது வெளியேறி விட்டன.

இப்போது வடலிப் பனைகளைப் போல தமிழ் அரசியல் தலைமைகள்.

என்ன செய்வது! வடலியின் இயல்பு. அருகில் நிற்கும் வடலியோடு சீண்டிச்சினந்து சத்தம் போடுகின்றன.

உள்ளே எல்லாம் வெறும் சோத்தி. அவ்வளவு தான்.

# நெடுந்தீவுப்பகுதி சுற்றுலாத்துறை சார்ந்து அபிவிருத்தி செய்யப்படும்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

நெடுந்தீவு பகுதி சுற்றுலா துறை சார்ந்து விரைவில் அபிவிருத்தி செய்யப்படுமென வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறையில் கடந்த வியாழக்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற பிரதேச சபைக்கான உழவு இயந்திரங்கள், தண்ணீர் தாங்கிகள் பலநோக்குக் கூட்டுறவு கடற்தொழிலாளர் சங்கங்களுக்கான கடனுதவிகள் மற்றும் தையல் இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையுடனும் தீவகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரமே தீவகத்தின் முழுமையான அபிவிருத்திப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை இப்பகுதி குளங்களின் புனரமைப்புப் பணிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதேவேளை மேலும் பல அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை மண்டபத்தில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றியதைத் தொடர்ந்து பிரதேச சபைக்கான உழவு இயந்திரங்கள், தண்ணீர் பவுசர்கள் என்பன பிரதேச சபை செயலாளர் சுதர்ஜனிடம் அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரால் கையளிக்கப்பட்டதுடன் வேலணை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளுக்காக ஒரு மில்லியன் ரூபாயும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மில்லியன் ரூபாயும் கையளிக்கப்பட்டன.

தொடர்ந்து பெண்களுக்காக சுய தொழில் முயற்சிக்கான தையல் இயந்திரங்களும் கையளிக்கப்பட்டன. (ஶ்ரீ-2)

# 11 வயது சிறுவன் மீது துஷ்பிரயோகம்

குளியாப்பிட்டி கிரிந்தவ பிரதேசத்தில் 11 வயதான சிறுவனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிந்தவ சனசமூக நிலையத்திற்குள் நேற்று முன்தினம் மாலை 6.30 அளவில் இந்த சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவத்தில் 21 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விரிவான விசாரணை களை குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஶ்ரீ-2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அனைத்து விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்ான செயலமர்வு நாளை திங் கட்கிழமை காலை 8.30 மணிக்கு மு / மாங்குளம் மகா வித்தியாலயத்தின் பிரார்த்தனைக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் கலந்து கொள்ளும் சகல விஞ்ஞானபாட ஆசிரியர்களும் தாம் கற்பிக்கும் தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களின் இரண்டாம் தவணைப்பரீட்சைப்புள்ளிப் பகுப்பாய்வுடன் சமுகம் தரும்படி துணுக்காய் கல்வி வலயப் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-4-15)

# மனநோயாளிகளாகும் மர்ம மனிதர்களின் மாயாஜாலங்களை

# எத்தனைமுறை மன்னிக்கவேண்டும்? ஏழுமுறை மட்டுமா? (மத்18:21-35)

மனநோயாளிகளாகும்... மர்ம மனிதர்களை எத்தனைமுறை மன்னிக்க வேண்டும் ஏழுமுறை மட்டுமா? இறைவா, இன்று நாம் பேதுருவைப் போல் விடைதேடுகின்றோம். இயேசுவே எமக்கு புரியும்படி விடைதர ஓடிவாரும். "மன்னிக்கமறுத்தபணியாளர்உவமை" என்னும் இன்றைய இறைவார்த்தை வழியாக இயேசு நம்மை மன்னிப்பின் மேன்மையையும் இறைவனின் பேரன்பையும் சிந்திக்க அழைக்கின்றார். இந்த உவமையில் வருகின்ற "அரசர்" தமக்கு மிகப்பெரிய தொகை கடன்பட்டிருந்த ஒருவருக்கு அக்கடனை மன்னிக்கிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

ஆனால், மன்னிப்புப் பெற்ற மனிதரோ தன் உடன்பணியாளர் தமக்குச் செலுத்த வேண்டிய ஒருசிறு தொகையை மன்னிக்க மறுத்துவிடுகிறார். கடவுள் நம் குற்றங்களையும் பாவங்களையும் தாராள மனத்தோடு மன்னிக்கிறார். ஆனால், நாம் மன்னிப்பதற்கு தயங்குகிறோம். இதற்கு காரணம் மன்னிப்பின் உண்மையான பொருளை உணராமல் நாமிருப்பதே ஆகும். மன்னிப்பு என்பது அன்பின் உச்சக்கட்டம். "நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்கவேண்டும் அல்லவா?" என்றார். சீராக கூறும் போது.

"வெகுளி, சினம் ஆகிய இரண்டு வெறுப்புக்குரியவை பாவிகள் இவற்றைப் பற்றிக் கொள்கின்றார்கள்" (சீராக் 27:30).


சினங்கொண்டால் ''ஆண்டவர் தங்களுக்கு நலம் அளிப்பார் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?'' "தம் பாவ மன்னிப்புக்காக எப்படி மன்றாட முடியும்?" "யார் அவர்களுடைய பாவங்களுக்குக் கழுவாய் தேட முடியும்?" என சீராக் 28:3,4,5 கேட்கின்றார். எனவே, மன்னித்து விடு! பகைமையை அகற்று. குற்றங்களைப்பொருட்படுத்தாதே. பூசலை தவிர்த்திடு. மேலும் கட்டளைகளில் நிலைத்திரு உடன்படிக்கையை கருத்தில் வை என சீராக் 28 அதிகாரத்தில் தொடர்ந்து கூறுகின்றார்.

இவற்றை எல்லாம் எத்தனை முறை செய்வது? பேதுரு இயேசுவிடம் கேட்கின்றார். ஆண்டவரே. என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனைமுறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மட்டுமா? இயேசுவின் விடை பேதுருவை வியக்கவைக்கின்றது. "ஏழுமுறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை" என "ஒவ்வொரு முறையும் தான்" என்கின்றார்.

இந்த மனநிலை எப்பொழுது எங்களில் வரும்? பவுல் சொல்வது போன்று ''நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை (உரோ 14:7) ) வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கின்றோம்." என செயற்படும் பொழுது தான் வரும்.

மன்னிப்போடு தொடர்புடைய இன்னொரு பண்பு இரக்கம், இரக்கம் காட்டவும் பெறவும் தகுதியில்லாத மனிதன் மன்னிப்பு பெறும் உரிமையும் தகுதியும் இழந்து விடுகின்றான் என இன்றைய உவமை உணர்த்துகின்றது.

மன்னிப்பதில் எவ்வித நிபந்தனையும் விதிக்காத இறைவன், நமது இரக்கமற்ற தன்மையைக் கண்டு ஒரேஒரு நிபந்தனை இன்று விதிக்கின்றான். நாமும் பிறரை மன்னிக்க என்நேரமும் எத்



தனை முறையும் தயாராக இருக்க வேண்டும் என்பதே அது. நமக்குத் தீமை தரும் யாவரையும் நாம் மன்னிக்க வேண்டும். பிறருக்குத் தீமை தரும் எதையும் நாம் மன்னிக்க முடியாது என்று இன்றைய நிகழ்ச்சிகள் எண்ண வைக்கின்றன.

என்ன எண்ணங்கள் எமக்கு வந்தாலும் இறைவா, நீர் எங்களை மன்னிப்பதுபோல நாங்களும் பிறரை மன்னித்திட அருள் தாரும் என்று வேண்டி (திருப்பாடல்:91) தினம் செபிப்போம்.

இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர். இருளில் உலவும் கொள்ளை நோய்க்கு நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர். தீங்கு உமக்கு நேரிடாது. வாதை உம் கூடாரத்தை நெருங்காது. நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி.தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார். எனவே ஆண்டவரே எம் புகலிடம் எம் அரண் நாம் நம்பியிருக்கும் இறைவனாவார். எம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும் எந்த கிறிசும் எம்மை அணுகாது.

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**



அழகானதோர் வாழ்க்கை உங்களுக்கும் உள்ளது அது எமக்குப் புரிகிறது....
மற்றைய வாகனங்களுக்குக் கிடைக்கும் புல் ஒப்ஷன் சேவையினைப் போன்றே, மோட்டார் சைக்கிள் செலுத்தும் உங்கள் வாழ்க்கைக்கும் வேறெந்த காப்புறுதிகளிலும் கிடைக்காத அரிய வாய்ப்புகள் ஏராளம். உங்களுடனும் உங்கள் குடும்பத்தினருடனும் வழித்துணையாக வர ஜனசக்தியிலுள்ள நாம் தயாராகவுள்ளோம்.
JANASHAKTHI FULL OPTION
வாழ்க்கைப் பயணத்தின் வழித்துணை
மோட்டார் சைக்கிள் செலுத்துகையில் அகால மரணம் ஏற்பட்டால் ரூ.100,000/-
ரூ. 50,000/- வரை வைத்தியசாலைக் கட்டணம்
தலை கவச பாதுகாப்புக் காப்புறுதி - இலவசம்
திடீர் விபத்து நேரிட்டால் ரூ. 100,000/- (காப்புறுதியாளருக்கு)
24 மணிநேர வாடிக்கையாளர் சேவை
விபத்து நடந்த இடத்திலேயே அங்கீகாரம்
நாடளாவிய கராஜ் வலையமைப்பு
மேலும் பல சலுகைகள் ஏராளம்
அழையுங்கள் 0112 303 300
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஜனசக்தி இன்சூரன்ஸ் பீ.எல்.சீ. (பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்)
JANASHAKTHI INSURANCE




இதோ உங்களுக்கான அரிய வாய்ப்பு!
57
TV
54
KTV
50
MUSIC
Dialog
சிறந்த தமிழ் அலைவரிசைகளை தற்போது SACHET பக்கேஜ் இல் பெற்றுக் கொள்ளுங்கள்.
மாதம் ரூ.299/- னை செலுத்தி Sun TV(57), KTV(54) மற்றும் Sun Music(50) அலைவரிசையின் 24 மணிநேர நிகழ்ச்சிகளை கண்டுகளியுங்கள்
இதனை செயற்படுத்த டயலொக் மொபைலில் இருந்து #679#க்கு அழைத்தும் வேறு மொபைல் வலையமைப்புகளில் இருந்து செயற்படுத்த ON <இடைவெளி> உங்கள் Dialog TV கணக்கு இலக்கம் <இடைவெளி> அலைவரிசை இலக்கம் என்பவற்றை டைப் செய்து 077 0 679 679 என்ற எண்ணுக்கும் SMS செய்யுங்கள்.
நீங்கள் ஒரு அலைவரிசையின் இலக்கத்தினை பதிவு செய்வதன் மூலம் மூன்று அலைவரிசைகளையும் கண்டுகளிக்கலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பொருத்தமான வரிகள் உள்ளடக்கப்படும்.
www.dialog.lk/tv
Dialog




Dulux Woodcare
Water Based
டியூலக்ஸ் வூட்கெயார் வோட்டர் பேஸ்
மழையில் நனையும் போதும் பயம்...
வெயிலில் காயும் போதும் பயம்...
மரத்தினாலான பொருட்களுக்கு பாதுகாப்பு தருகிறது
டியூலக்ஸ் டயமன்ட் றவ் வோட்டர் பேஸ்
உங்களுடைய கதவு, யன்னல் மற்றும் தளபாடங்கள் பற்றிய பயத்திற்கு சரியான பாதுகாப்பு. டியூலக்ஸ் டயமன்ட் றவ் வோட்டர் பேஸ் தரும் பயன்கள்:
அதிக பரப்பளவிற்கு பூசக்கூடியது, பூசுவதற்கு இலகுவானது
சூழலுக்கு ஏற்றது. மனித தோலிற்கு தீங்கற்றது
ஊதாக் கதிர்களிலிருந்து பாதுகாப்பு தருகிறது
கடல் நீர்த்திவலைகளிலிருந்து பாதுகாக்கிறது
நீர் உட்புகுதலைத் தடுக்கிறது
மரத்தினாலான பொருட்களை நீண்டகாலம் பாதுகாக்கும்
உங்கள் கவனத்திற்கு : டியூலக்ஸ் வூட்கெயார் டயமன்ட் றவ் வோட்டர் பேஸ் கொள்கலன் ஒன்றை வாங்கும் போது அதன் சில்லறை விலை தெளிவாக அச்சிடப்பட்டுள்ளதா என்பதைக் கவனியுங்கள். ஆகக் கூடிய சில்லறை விலை 1 லீட்டர் ரூபா 1,206/- இலிருந்து

# நல்லிணக்க ஆணைக்குழு...

அமெரிக்க இராஜாங்கத்திணைக் களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலன்ட் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நாளை ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில் ஏற்கெனவே உதவிச் செயலாளர் பிளேக்கின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது அவர் மீண்டும் பயணம் செய்கிறார். ஆனால் இதற்கிடையில் இலங்கைக்கு சாதகம் இல்லாத சில விடயங்கள் இடம்பெற்றுள்ளன. ஐ.நா. மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பல அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இந்த அறிக்கைகள் காரணமாக அவரின் திட்டத்தில் மாற்றம் ஏற்படுமா என செய்தியாளர் ஒருவர் வினவினார்.

அக்கேள்விக்கு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலன்ட் பதிலளிக்கையில், இல்லை அவர் தற்போது தன் பயணத்தில் சென்று கொண்டிருக்கிறார். சூறாவளி காரணமாக அவரால் விமானத்தில் பறக்கமுடியவில்லை என்பதால் அவரின் பயணம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அவர் இலங்கையில் ஆக்கப்பூர்வமான சந்திப்புக்களை எதிர்பார்க்கின்றார் என்றார்.

ஐ.நா. மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகள் குறித்து கருத்துகேட்கப்பட்டபோது, நாம் மன்னிப்புச்சபை அறிக்கையிலிருந்து குறிப்பெடுத்துள்ளோம். நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்காக நாம் கத்திருக்கிறோம் என எண்ணுகிறேன். வெளிப்படையாக பிளேக்கின் விஜயத்தின் நோக்கங்களில் ஒன்றானது இந்த அறிக்கை தொடர்பாக இலங்கையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் அதன் (அறிக்கை) மூலம் அவர்கள் நம்பகமான பணியொன்றை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதுமாகும்.

சுயாதீன விசாரணை ஒன்றுக்காக இலங்கை அரசாங்கத்திற்கு காலவரையறை கால அவகாசம் எதுவும் வழங்குகிறீர்களா? என செய்தியாளர் வினவினார்.

அவர்கள் இந்த அறிக்கை நவம்பர் மாதம் வெளிவரும் எனகூறியுள்ளார்கள். அது சிறந்ததாக பலமானதாக நம்பகமானதாக இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதே எமது முதல் இலக்காகும் என்று பதிலளித்தார். (ந-5)

# பருத்தி...

மடக்கிப் பிடித்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிடிபட்ட மர்ம மனிதன் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த சிங்களவர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ந-24;9)

# சித்தன்கேணியில் மர்ம மனிதன்

(சித்தன்கேணி)

சித்தன்கேணியிலுள்ள வலி மேற்கு பிரதேசசபை தலைவர் வீட்டிற்குள் நேற்றிரவு 7.00 மணியளவில் மின்சாரம் இல்லாத வேளையில் மர்ம மனிதர்கள் இருவர் நுழைந்ததாக வட்டுக்கோட்டை பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தெரிவிக்கையில்,

சித்தன்கேணி வைரவர் கோவிலடியில் உள்ள எனது வீட்டிற்குள் நேற்றிரவு 7.00 மணியளவில் மின்சாரம் இல்லாத வேளை இரண்டு மர்ம நபர்கள் நுழைந்துள்ளனர்.

இதில் ஒருவர் வீட்டு வாசலில் தலைக்கவசம் அணிந்த நிலையிலும் மற்றொருவர் வீட்டுக் கூரையிலும் இருந்ததை எனது தாயார் கண்டுள்ளார். இந்நிலையில் இருவரும் தப்பி ஓடியுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளை கூட்டம் ஒன்றிற்கு நான் சென்றிருந்தமையினால் அங்கிருந்து சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்தேன்.

இதேபோன்று நேற்று முன்தினமிரவு மின்சாரம் தடைப்பட்ட வேளை வீட்டுக்கு அண்மையிலுள்ள வீடொன்றிலும் மர்ம மனிதன் நுழைந்தான் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# தேசிய மட்ட...

அத்துடன் நேற்று முன்தினம் நடைபெற்ற உடற்பயிற்சி பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியனானதுடன் வவுனியா ரம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பிடித்தது.

இதேவேளை நேற்று நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை அணி முதலாமிடத்தைப் பெற்று சம்பியனானது.

தேசிய மட்டத்தில் வடக்கு மகாணத்திற்கு பெருமை சேர்த்த மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஊர்காவற் துறை சென். அன்ரனிஸ் கல்லூரி, மன்னார் சென். சேவியர் கல்லூரி, வவுனியா ரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வீர, வீராங்கனைகளுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் பாராட்டுக் களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர். (ந-5)

# மனித உரிமைகள்...

வுள்ளனர்.

நாளை ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 18வது கூட்டத் தொடர் 30 ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உரையாற்றுவதற்கு பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு 12ஆம் திகதி சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜெனிவா செல்லும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமக்கான ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் இக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவார்கள என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

# இராணுவத்...

இராணுவத்தினர், பிடிபட்ட படையினரை நெருங்கவிடாமல் மக்களை அடக்கியுள்ளனர்.

தொடர்ந்து சம்பவ் இடத்துக்கு வந்த பொலிஸார் இராணுவத்தினரை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் சிலரை தடுத்து வைத்திருந்தனர்.

எனினும் அவ் இடத்திற்கு விரைந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா,

கிறீஸ் பூதத்தை நீங்கள் பிடிக்கவில்லை. மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் இராணுவத்தினரை பிடித்துள்ளீர் எனவே சட்டத்தின் பிரகாரம் உங்களை (பொது மக்களை) என்னால் கைது செய்ய முடியும்.

ஆனால் மனிதாபிமான அடிப்படையில் உங்களிடத்தில் நடந்து கொள்கிறேன் எனத் தெரிவித்து விட்டு பிடிபட்ட இரு படையினரையும் மீட்டுச்சென்றார்.

இதேவேளை பிடிபட்ட படையினரில் ஒருவர் அப்பகுதிக்குப் பொறுப்பான படையதிகாரி என தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## மரண அறிவித்தல்

### திருமதி திருநாவுக்கரசு சிவபாக்கியம்



இறத்தோட்டையை பிறப்பிடமாகவும் கேணியடி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு சிவபாக்கியம் 10-09-2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான மயில்வாகனம் தம்பதியினரின் புதல்வியும் திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், ஆறுமுகம், கந்தப்பு, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் குமரதாசன், கோகுலதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதை, ஜானகி ஆகியோரின் சிற்றன்னையும் ஸ்ரீகுமார், இருதயநாதன், யாழினி ஆகியோரின் அன்பு மாமியும் அபிலெஷ்னின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 11-09-2011 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
021 222 9567

தகவல்:
குடும்பத்தினர்

(சி-4389)




தர்சன் ஏஜென்சி

ஐயா கடையடி, A9 வீதி, மீசாலை

எமது சேவைகள்

1. மின் இணைப்பு Electrical Wiring - கோவில், வீடு, அலுவலகம், தொழிலகம் போன்றன.

25 Years Warranty

2. தண்ணீர் மோட்டர், தண்ணீர்க்குழாய் பொருத்தல்
3. குளியலறை சாதனங்கள் பொருத்துதல்
4. வர்ணாங்கள் பூசுதல் - வீடு, அலுவலகம், கோவில், தொழிலகம் போன்றன

உங்கள் விருப்பம் போல் வேலைகளுக்குரிய வர்ண வகைகளையும் மின்னிணைப்பு பொருட்களையும் உத்தரவாதத்துடன் நாங்கள் வழங்குவோம்.

அழையுங்கள்: த. காண்டீபராஜா (சி-4390)

0773276531, 0773604014

உயர்தர பரீட்சைகளின் பின்
Your next step...

IT Qualifications
தகவல் தொழில்நுட்பம்
Multimedia
கிராபிக்ஸ், மல்டிமீடியா அனிமேஷன்
Access Programme
Higher Education Entry Qualification
English Language
Training



Win 75% SCHOLARSHIP
Collect Your Free Admission Card
ISO 9001 : 2008 Certified Institution

Mega
COMPUTER SCHOLARSHIP

இலவச புலமைப்பரிசில்
- பரீட்சையை தமிழ், சிங்களம் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- பாடசாலைப் பாடத்திட்டம் & பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி (Installment)
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

செப்டெம்பர் 18 ஞாயிறு

மாணவர்கள் நேரடியாகவும், ஸ்கொலர்ஷிப் திட்டத்தின் மூலமாகவும் பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்

Admissions on Progress !

ASIAN COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | வவுனியா |
|---|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி | 192 குருமன்காடு சந்தி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 | மன்னார்வீதி . 024-2226050 |

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை

G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு:-

கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

யாழ்ப்பாணம் aramex delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



உல்லாசம் உங்கள் கண்முன்னே...

TILKO JAFFNA CITY HOTEL

No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969

web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



மீண்டும் யாழ்.மண்ணில் பிரபல தமிழாசிரியரின் விசேட வகுப்பு

"தமிழ்"

A/L,O/L மாணவர்களுக்கு

தொடர்பு: 0774669841,0217900668

குறிப்பு: பெறுபேறு உறுதிப்படுத்திக் கற்பிக்கப்படும். (6116)


# பளையில் நேற்று விபத்து...

ஆவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் பளை ஏ-9 வீதியில் எதிரே வந்த சிறிய ரக கன்ரர் வாகனத்துடன் விபத்துக் குள்ளாகியுள்ளார்.

படுகாயங்களுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் இடை வழியில் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் வர்த்தக நிலையம் நடத்திவரும் பிரஸ்தாப குடும்பஸ்தர் பண்டத்தரிப்பு முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவுக்குச் செல்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு பயணித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-5)


பதிவுகள் நடைபெறுகிறது NIBM

Certificate in Compueter Science
Certificate in English Language
&
Management Courses

அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்

Weekday Batches 19-09-2011 & Weekend Batches 17-09-2011

077 071 6974 , 021 222 0360

No-40 College Road , Jaffna



யாழ் நகரில் மிக குறைந்த கட்டணத்தில்

அனைத்து நாடுகளுக்கும் சகல விமானப் பயண பற்றுசீட்டுக்கள பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

Special Tour Package 16875/= +Tax 4DAY 3NIGHT

www.nationtravels.com

Hotline:0114 651 199
0214920920

Nation Popular Travels & Tours

#82.பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் (நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக)

Tel : 0114375357
0773083820



After A/L?

Government Schol.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்

Multimedia_USA

FIT University of Colombo-ucsc Rs.10,000 off

CIMA-UK
Per Level Rs.14,400
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 9 AM- 2 PM

Engineering-USA
80% off
Batch I : Sat & Sun 10 - 12PM
Batch II : Sat & Sun 4 - 6PM
Batch iii : Mon- Fri 8 AM -10 AM

BIT University of Colombo-ucsc
Per year Rs.20,000 (Sem 1 & 2)
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Fri 4.30-5.30 PM

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

Free Course fee : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,

MCS

Supported By UNDP/JRRP
www.mcsitcampus.org

Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing
Free Course fee* *Hardware *Accounting *DTP *English

324,Palaly Road,
Campus Junction,Jaffna.

கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் மற்றைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.



புதிய துறை.... புதிய அனுபவம்...

வேலை வாய்ப்பிற்கான அடித்தளம்...

Nation Popular Travels & tours இன் 2நாள் பயிற்சிப்பட்டறை

Tourism,Airticketing
Media and Tourism
Personality Development...
போன்ற துறைகளில்...
திகதி- Sep 24,25

வயது-17ற்கு மேற்பட்டோர்

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகை தரும் பிரபல சுற்றுலாத் துறை விரிவுரையாளர்கள் பிரபல வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் முன்னணி விமான சேவை நிறுவனங்களின் அதிகாரிகளினால் நடாத்தப்பட உள்ளது.

உங்கள் திறமையினை வெளிப்படுத்தி வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தினை அமைத்துக் கொள்ளுங்கள்..

சான்றிதழ் வழங்கப்படும்
அனுமதிக்கு முந்துங்கள்

Sms ஊடாக முழு விபரங்களையும் இப்பொழுதே முற்பதிவு செய்யலாம்... 077 217 59 69

HRM
Nation Popular Travels & Tours
No 82, Brown Road, Jaffna.

Hot Line: 0214920920
www.nationtravels.com

35 பேருக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி



பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம், இணுவில்

பாரதி - சித்தங்கேணி

ஆசிரியர்: எஸ். கோகுலன்

அரசியல் விஞ்ஞானம்

| 2012 | | 2013 | |
|---|---|---|---|
| அலகு - 12 | | அலகு - 4 | |
| ஒப்பீட்டு அரசியல் | | அரசாங்கம், யாப்பு மாதிரிகள் | |
| யாழ்ப்பாணம் (Sat, Sun) | 9 - 10 am | யாழ்ப்பாணம் (Sat, Sun) | 8 -9 am |
| | 10 - 11 am | | |
| இணுவில் (Sat, Sun) | 12 - 1 pm | இணுவில் (Sat, Sun) | 11 - 12 am |
| Tu | 4 - 5 pm | | |
| பாரதி (Sat, Sun) | 3 - 4 pm | பாரதி (Sat, Sun) | 2 -3 pm |
| Fri | 5 - 6 pm | | |



தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் மீண்டும் 1-ம் இடம் பெற்று யாழ். புகழை தக்க வைத்த

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியை

வாழ்த்துகின்றோம்

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
யாழ்ப்பாணம்

(C-4388)



YOGI'S BEAUTY

(THE ACADEMY OF BEAUTY THERAPY, HAIR DRESSING & HOME SCIENCE)

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 18-09-2011 அன்று ஆரம்பமாக உள்ளன.

1) அழகுக்கலை (Advanced Beauty Culture & Hair Dressing)
2) Advanced Cosmetology Course
3) நவீன ஒப்பனையும், தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make-up & Hair Styles)
4) 10 வகை வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்
5) கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (B'day Cakes,Fondant Strctures & Sugar Flowers)

பயிற்சிகளில் சேர விரும்பும் அனைவரும் உடன் தொடர்பு கொள்ளவும்

ஆசிரியை
Mrs. Yogini Shanmuganathan
Diploma in High tec Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make up & Character - Make-up (India)
Diploma in Home Economics (India & Sri Lanka)

75 அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Phone 021 2222796, 077 7164923
021 3210077



SAAMSON ENGLISH

3 மாத ஆங்கில பயிற்சிப் பட்டறை

இலக்கணம், எழுத்துப் பயிற்சி, CD ,புத்தகக் கற்றல் எதுவுமின்றி நேரடியாக மாணவர்களை உரையாடப் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கில பேச்சுப் பயிற்சியை வழங்கிவரும் Saamson நிறுவனத்தின்

புதிய பயிற்சிப் பட்டறைகள் ஆரம்பம்: 17.09.2011

பிரிவுகள் : காலை 08-10, 10-12 மாலை 01-03, 03 - 05

வாரநாள் (புதன் ,வெள்ளி) காலை 08 - 10,10-12 , மாலை 01-03 , 03-05.

SAAMSON ENGLISH

279,Clock Tower Road,Jaffna
TEL: 0776214567

(C-4381)



வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர் கந்தனை வேண்டுகின்றோம்

இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னனியான நிறுவனம்

World Express Services

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்

கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2220356
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)

தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15
தொ.பே: 0112520894

கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி,
வைரவ புளியங்குளம்,வவுனியா
தொ.பே: 024 490 3200

E.Mail: Worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.